# இன்னொன்று

ஒன்றைப் பற்றி மட்டுமல்ல

இதழ் – 02
மார்ச் – ஏப்ரல்
விலை – ரூ 50



என் உணவு
உன் குப்பைத்தொட்டியில்

சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம்

# சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

எம்மைச் சூழ நிகழும் விடயங்களைக் கூர்ந்து அவதானித்து அவை பற்றி ஆழமாகக் கற்றறிந்துகொள்வது அவசியமாகும். எம்மைச் சூழ நிகழ்வன பற்றிய ஆழ்ந்த அறிவு இல்லாமற்போனால் தீங்கு தரும் உள்நோக்கங்களுடன் பொய்யான கருத்துக்களைப் பரப்புவோரை எம்மால் இனம் காண முடியாமற்போகும். எம்மை ஆட்டுவிப்பவர்களின் பின்னால் கேள்வியில்லாமல் மந்தைகள் போல நாமும் போக வேண்டி வரும். பரவலானதும் ஆழமானதுமான அறிவினைப் பல வழிகளிலும் தேடிக்கொள்ளலாம். அதில் சிறந்ததொரு வழிமுறை கலந்துரையாடுதலாகும்.

ஒருவர் பேசிக்கொண்டும் போதித்துக்கொண்டுமிருக்க மற்றவர்கள் வாய்மூடிக் கேட்டுக் கற்றல் என்பது பழசாகிப்போன முறையாகும். அனைவரும் சமமாகத் தம் கருத்துக்களை முன்வைத்தும் ஐயங்களைக் கேட்டும் கலந்துரையாடியவாறு அறிவினைத் திரட்டிக்கொள்ளுதல் வினைத்திறன் மிக்கதொரு முறையாகும். அவ்வாறு எமைச்சூழ நிகழ்வன பற்றிய ஆழமான அறிவினைக் கலந்துரையாடல்களின் மூலம் பெற்றுக்கொள்ளும் நோக்குடனே சமூக விஞ்ஞான கற்கை வட்டக் கூட்டங்கள் வாரம் தோறும் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும். அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் மாலை 6:30 இற்கு ஆழமான கலந்துரையாடல் இடம்பெறும். நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் சமூக மாற்றத்துக்கான ஒத்த சிந்தனை கொண்டோர் கூடி ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது. அண்மைய சந்திப்புகளின் பட்டியல் கீழுள்ளது.

## இரணைமடுக் குளமும் வடக்கின் நீர்ப் பிரச்சினையும்
பெப்ரவரி 27 **1**

யாழ்ப்பாணத்தின் நீர்ப் பிரச்சினை, அதற்கான தீர்வாக முன்வைக்கப்படும் இரணைமடுக் குளத்திலிருந்து நீர் வழங்கும் திட்டம் என்பவை இன்று சர்ச்சைக்குரிய விடயமாகியிருக்கிறது. இரணைமடுத் திட்டத்தின் பின்னணிகள் எவை, அக்குளத்தைச் சூழ்ந்துள்ள அரசியல் என்ன, எமது நீர்ப்பிரச்சினையின் எதிர்காலம் எவ்வாறுள்ளது என்பது பற்றிய உரையாடலாக இக் கலந்துரையாடல் அமைந்தது.

## போக்குவரத்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி
பெப்ரவரி 20 **2**

போக்குவரத்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் போக்குவரத்து உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் பங்களிப்பும் தேவையும், இலங்கையில் நடைபெறும் போக்குவரத்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள், அதன் பின்னால் உள்ள அரசியல் போன்றன தொடர்பாக இந்தக் கூட்டத்தில் உரையாடப்பட்டது.

## மீனவர்கள் பிரச்சினையும் மீன்பிடித் தொழிலின் எதிர்காலமும்
பெப்ரவரி 13 **3**

போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இந்திய – இலங்கைக் கடல் எல்லையில் இலங்கை மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையில் இருந்த முரண்பாடு ஊடகங்களின் கவனத்தினை ஈர்த்தது. இம் முரண்பாடுகளின் அடிப்படைகள் என்ன, இரு நாட்டு மீனவர்களுக்குமிடையில் உள்ள இப்பிரச்சினை சுயநல அரசியல் இலாபங்களுக்கு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது, இப்பகுதியில் மீன்பிடித் தொழிலினதும் மீனவர்களதும் எதிர்காலம் எவ்வாறாக அமையப்போகிறது என்பவை பற்றிய கலந்துரையாடலாக இக் கூட்டம் அமைந்திருந்தது.

தொடர்ச்சி பின் அட்டையின் உட்பக்கத்தில்...

சமூக விஞ்ஞானக் கற்கை வட்டத்தின்

# இன்னொன்று

ஒன்றைப் பற்றி மட்டுமல்ல

மார்ச் - ஏப்ரல் 2014

இதழ் - 02

**ஆசிரியர் குழு**

க. ஆதித்தன்

ம. மிதுன் ராகுல்

தி. அனோஜன்

**தொடர்பு**

ஆசிரியர் குழு

இல 121, ஹம்டன் லேன்,

வெள்ளவத்தை, கொழும்பு

**தொலைபேசி**

011 2505448

**மின்னஞ்சல்**

innonru@gmail.com

**வெளியீடு**

சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம்

ISSN : 2345-9506

## இன்னொன்றுக்கு எழுதுங்கள்

சமூக அக்கறை கொண்ட உங்கள் எழுத்துக்களைப் பிரசுரிக்க "இன்னொன்று" ஆயத்தமாயிருக்கிறது.

உங்கள் ஆக்கங்களைத் தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ ஆசிரியர் குழுவுக்கு அனுப்புங்கள்.

# பெண் விடுதலையே ஒட்டுமொத்த சமூகத்தின் விடுதலை

சமூகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அவர்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கும் வகையில் பெருகியுள்ளன. அதனிலும் பெரிய ஆபத்து அத்தகைய குற்றங்கள் குறித்து நாம் வெட்கம் கொள்வதற்கு பதிலாக பாதிக்கப்பட்ட பெண்களையே குற்றவாளியாக்குவது. இது பெண்களுக்கு எதிராக நாம் கொண்டிருக்கும் தவறான மனநிலையையே காட்டுகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இதுவரை அவர்கள் போராடிப் பெற்ற சுதந்திரங்கள் அனைத்தையும் கேள்விக்குட்படுத்துகின்றன.

கல்வி கற்பதற்கும், வேலைக்குச் செல்வதற்கும், பொதுவெளி யில் புழங்குவதற்குமான உரிமைகளை பெண்கள் போராடியே பெற்றனர். வென்றெடுக்கப்பட்ட உரிமைகள் மூலம் தமக்கெதிரான ஒடுக்குமுறைகளை கணிசமான அளவில் எதிர்கொள்ள அவர்களால் முடிகிறது. இதைப் பல்வேறு சமூகப் பொருளாதாரக் காரணிகள் சாத்தியமாக்கியபோதும், இன்றுவரை ஏராளமான பெண்கள் இது போன்ற உரிமைகள் மறுக்கப்பட்ட வாழ்வையே வாழ்கின்றனர்.

பெண்கள் பாரம்பரிய ஒடுக்குமுறைச் சூழலிலிருந்து கணிசமாக விடுதலை பெற்றுள்ளபோதும் அவர்களிற்கெதிரான ஒடுக்குமுறைகள் வெவ்வேறு தளங்களில் தொடர்கின்றன. குறிப்பாக பணியிடங்களில் நிகழும் சுரண்டல்கள், குறைந்த கூலியில் உழைப்பைப் பெறும் நோக்கில் பெரு நிறுவனங்கள் பெண்களை வேலைக்கமர்த்துவதிலிருந்து இது தொடங்குகிறது.

இன்று நுகர்வுக்கலாசாரத்தின் இலக்காக பெண்களே உள்ளனர். அழகுசாதனப் பொருட்கள் முதல் வீட்டுப்பாவனைப் பொருட்கள் வரை பெண்களை இலக்குவைத்தே சந்தைப்படுத்தப்படுகின்றன. மறுபுறமாக பெண்களை போகப்பொருளாக்கும் வேலையையும் அதுவே செய்கிறது. ஒருபுறம் சுரண்டப்படுபவர்களாக மறு புறம் சுரண்டலுக்கான கருவிகளாக என இருபுறமும் பெண்களே பாதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் பெண்கள் தினம் என்பது பொதுவில் கூடி ஒப்புக்கு சில வார்த்தைகளை பேசி கழிக்கும் சடங்காகிவிட்டது. மாறாக பெண்களுக்கு எதிரான சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக விடுதலையை கோரும் தினமாக இருக்கவேண்டியது அவசியமா னது. பெண் விடுதலையென்பது ஒட்டுமொத்த சமூகத்தின் விடுதலை. மனித குலம் சமத்துவமற்று சுரண்டுவோர்-சுரண்டப்படுவோர், ஒடுக்குவோர்-ஒடுக்கப்படுவோர், ஆளுவோர்-ஆளப்படுவோர் என வர்க்கங்களாக பிளவு பட்டிருக்கும் சூழலில் சட்ட இடர்பாடுகள் மூலமோ சர்வதேச தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் மூலமோ பெண்களின் விடுதலையை சாத்தியப்படுத்தலாம் என நினைப்பது பொய்க்கனவு. அவ்வாறு பெறப்படும் விடுதலை முழுமையற்றது.

தமக்கெதிரான ஒடுக்குமுறையை பெண்கள் உணர்வதும் அதைப்பற்றி உரக்கப் பேசுவதும் சமூகத்தில் காணப்படும் சகல விதமான ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும் குரலெழுப்புவதுமே பெண்விடுதலைக்கான மார்க்கமாக அமையமுடியும்.



# என் உணவு உன் குப்பைத் தொட்டியில்

-தி. அனோஜன்

காலையில் எழுந்து சமையலறைக்குச் செல்கிறீர்கள். சாப்பாட்டு மேசையில் இன்னமும் பிரிக்கப்படாத நிலையில் இருக்கிறது முதல்நாள் இரவு மேலதிகமாக வாங்கிவந்த உணவுப் பொட்டலம். குப்பைக்கூடையில் போட முனைகிறீர்கள். "அது என் உணவு எனக்குப் பசிக்கிறது..." என்கின்ற குரல் உங்களுக்குக் கேட்கவில்லையா? சரி, குளிர்சாதனப் பெட்டியை திறக்கிறீர்கள், அதிலே நாள் பிந்தியதால் பழுதடைந்த பால் போத்தலைக் காண்கிறீர்கள். அதையும் தூக்கிப் போடப் போகிறீர்கள். "எனக்குக் குடிப்பதற்கு பாலே கிடைப்பதில்லை..." இந்தக் குரல்கூட கேட்கவில்லையா? கொஞ்சம் உற்றுக் கவனியுங்கள் கட்டாயம் கேட்கும்.

இந்தக் குரல்கள் ஆபிரிக்காவிலிருந்தோ அல்லது ஆசியாவிலிருந்தோ தான் வரவேண்டும் என்று இல்லை. இந்தக் குரல்களுக்குச் சொந்தக்காரர்கள் அமெரிக்கா, பிரித்தானியா என எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். பசி ஒரு சர்வதேச பிரச்சினை. அதேபோல இது அமெரிக்கர்கள், பிரித்தானியர்கள் போன்றோரின் காதுகளை நோக்கி மட்டும் எழும் குரல்கள் அல்ல. உலகின் எல்லா முடுக்குகளிலுமிருக்கும் உணவை வீணடிப்பவர்களின் காதுகளை நோக்கிப் பாயும் குரல் இது. ஏனெனில் உணவை வீணடித்தல் ஒரு சர்வதேச நோய்.

உலகின் சகல பகுதிகளிலும் பட்டினியால் வாடும் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பகிர்ந்தளிக்க போதிய உணவு இல்லாததாலேயே அவர்கள் பசியில் வாடுவதாய் நாம் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மை அதுவல்ல. 7.127 பில்லியன் மக்கள் வாழும் இப்பூமியில் 9.5 பில்லியனுக்கும் அதிகமானோருக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய உணவு உற்பத்தியாகிறது. இதைப் பார்க்கும் போது தவறு எங்கோ இருக்கிறது என்றே தோன்றுகிறது.

உண்மையில் தவறு ஓர் இடத்தில் மட்டுமன்றி பல இடங்களுக்குமாய் விரிகிறது. மற்ற எல்லா இடத்தையும் விட்டுவிட்டு முதலில் நம்மைப் பார்ப்போம். நம் தவறைச் சற்றுக் கவனிப்போம். சர்வதேச ரீதியில் உணவை விரயமாக்கல் தொடர்பான புள்ளிவிபரங்களை எடுத்துப்பார்க்கும் போது அவை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின. நமது தவறின் அளவு விளங்குகிறது. எடுத்துக்காட்டுக்காக சிலவற்றைச் சொல்லலாம்.

- உலகம் முழுவதிலும் ஆண்டுதோறும் 1.3 பில்லியன் தொன்னுக்கும் அதிகமான உணவு வீணடிக்கப்படுகிறது.
- உலகம் முழுவதிலும் வீணடிக்கப்படும் உணவுகளில் 45 சதவிதத்துக்கும் அதிகமான உணவுகள் உண்ணக்கூடிய நிலையிலேயே குப்பைத்தொட்டியை சென்றடைகின்றன.
- அமெரிக்காவில் உற்பத்தியாகும் உணவில் பருமட்டாக 40 சதவீதமான உணவு வீணடிக்கப்படுகிறது.

- நான்கு பேரைக் கொண்ட அமெரிக்கக் குடும்பமொன்று வருடம்தோறும் 1365 அமெரிக்க டாலர் பெறுமதியான உணவை வீணடிக்கின்றது.

- பிரித்தானியாவில் மொத்த உணவுக் கொள்முதலில் 33% வீணடிக்கப்படுகிறது. இது பிரித்தானியாவின் மொத்த உணவு உற்பத்தியைவிட அதிகமாகும். (பிரித்தானியாவின் உணவுத்தேவையில் பெருமளவு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவிலேயே தங்கியுள்ளது.)

- ஒரு பிரித்தானியர் 200 தொடக்கம் 290 ஸ்ரேலிங் பவுண்டு பெறுமதியான உணவை ஒவ்வொரு வருடமும் வீணடிக்கிறார்.

- வளர்ந்த நாடுகளில் உள்ள ஒரு சராசரிக் குடும்பம் வாரந்தோறும் 4 முதல் 6 நபர்களுக்கு ஒருவேளைக்குப் போதுமான உணவை வீணடிக்கிறது.

உலகில் 842 மில்லியனுக்கு அதிகமானோர் போதிய உணவின்றி இருக்க நாமோ உணவை வீணடித்துக் கொண்டிருக்கிறோம். நாம் ஏன் உணவை வீணடிக்கிறோம். உணவு வீணடிக்கப்பட பல காரணங்கள் உள்ளன. அளவுக்கு அதிகமாகச் சமைப்பதால் அல்லது தயாரிப்பதால், உணவை உரிய காலத்தினுள் உண்ணாமை போன்றன அடிப்படைக் காரணிகள்.

முற்றாக மாறியிருக்கும் நமது வாழ்க்கை முறையும் உணவு வீணடித்தலுக்கு ஒரு காரணமாய் உள்ளது. ஒவ்வொரு நாளும் மிகுந்த பரபரப்பாக நகர்ந்து செல்கையில் உணவு சம்பந்தமான விடயங்களில் முன்திட்டமிடல் என்பதையே நாம் மறந்து போகிறோம். கடைகளுக்குச் சென்றுவிட்டுத்தான் எதை வாங்க வேண்டுமென்றே யோசிக்கிறோம். அநேக வேளைகளில் வீடுகளில் குறித்த உணவுப்பொருள் இருக்கும்போதே அதை மீளக்கொள்வனவு செய்கிறோம். மீதமாய்ப்போன அல்லது பழுதாய்ப் போன உணவைக் குப்பையில் கொட்டும்போதுதான் அடுத்த முறை சரியான அளவில் சமைக்க வேண்டும் என எண்ணுகிறோம். இப்படியாக முன் திட்டமிடல் இல்லாமல் நாம் உணவை அணுகுவதால் வீணாகும் உணவு உண்மையில் இன்னொருவருக்குச் சொந்தமானது.

நாம் வீணடிக்கும் ஒவ்வொரு உணவும் இன்னொருவரின் பசியைத் தீர்க்க வல்லது. ஆனால் நாம் அதை எண்ணிப்பார்ப்பதற்கான சமூக அக்கறையை இன்றைய பரபரப்பான உலகம் கற்றுத்தருவதில்லை. இயந்திரங்கள் போல ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கையில் வாழ்வின் இனிய கணங்களை ரசிக்கவே நமக்கு நேரமில்லாமல் இருக்கிறது. இந்நிலையில் எப்படி இன்னொருவரைப் பற்றி நினைப்பது.

**நீங்கள் உணவை வீணடிக்கப் போகிறீர்கள் என்பதற்காகக் கடைக்காரன் உங்களுக்கு அதை இலவசமாக வழங்கப்போவதில்லை. நீங்கள் வீணடிக்கும் ஒவ்வொரு பகுதி உணவுக்குமாக நீங்கள் பாடுபட்டு உழைத்த பணமே செலவாகிறது.**

உண்மையில் உணவு வீணாவதைத் தடுப்பதற்கு நாம் பொது நலத்தோடு சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. முற்றிலும் சுயநலமாக சிந்தித்தாலே போதுமானது. நீங்கள் உணவை வீணடிக்கப் போகிறீர்கள் என்பதற்காகக் கடைக்காரன் உங்களுக்கு அதை இலவசமாக வழங்கப்போவதில்லை. நீங்கள் வீணடிக்கும் ஒவ்வொரு பகுதி உணவுக்குமாக நீங்கள் பாடுபட்டு உழைத்த பணமே செலவாகிறது. உங்கள் பணத்தைக் குப்பையில் போட நீங்கள் விரும்ப மாட்டீர்கள் அல்லவா?

உணவு வீணாக்கலைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமான சூழலில் வாழும் போது அவற்றுக்கான உபாயங்களைத் தெரிந்து வைத்திருப்பது மிகவும் அவசியம். உணவு வீணடிப்பதை எதிர்த்து விழிப்புணர்வுப் போராட்டங்களை நடத்தும் சில அமைப்புக்கள் இதற்கான பல உத்திகளை முன்வைக்கின்றன. அவர்கள் முன்வைக்கும் முக்கிய தீர்வு முன்திட்டமிடல். கடைகளுக்கு உணவுப்பொருட்கள் வாங்கச் செல்லமுன் வீட்டில் என்ன என்ன எல்லாம் இருக்கின்றன எவையெல்லாம் தேவை என்பதை திட்டமிட்ட பின்னரே கடைக்குச் செல்லுங்கள். கடையில் வைத்துப் புதிதாய்ப் பார்க்கும் பொருட்கள் எல்லாவற்றையும் வாங்காதீர்கள். முடியுமானவரை சிறிய கடைகளில் வாங்குங்கள். வாங்கி வந்த பொருட்களை காலவதியாகும் திகதி அடிப்படையில் அடுக்கி வைத்து முதலில் பழுத டையக் கூடியதை முதலில் பயன்படுத்துங்கள். அளவாகச் சமையுங்கள். மீதமான உணவை அடுத்த உணவுவேளையின்போது உண்பதற்கு ஏற்றவகையில் பதப்படுத்தி வையுங்கள். இவ்வாறு அவர்கள் சொல்லும் எல்லா உத்திகளும் கடைப்பிடிக்க இலகுவானவை.

சற்று நேரம் ஒதுக்கித் திட்டமிட்டு வாழ்ந்தால் உங்கள் பணப்பையும் செழிப்பாக இருக்கும் இன்னொருவருடைய உணவும் வீணாகாமல் இருக்கும்.



# பண்டிகைகள் விற்பனைக்கு...

-கதிர்

பல நாட்களுக்குப்பின் முகநூல்ப் பக்கம் போயிருந்தேன். "இது நான் ஹோலிப் பண்டிகையின் போது எடுத்துக் கொண்ட புகைப்படம்" என்ற குறிப்புடன் தனது புகைப்படத்தை பகிர்ந்திருந்தான் பாடசாலைக்கால நண்பன் ஒருவன். "இது யாருடைய பண்டிகை? இதையேன் நீ கொண்டாடுகிறாய்? யார் சொல்லிக் கொண்டாடுகிறாய்?" கோபமாக இன்னொரு நண்பன் கருத்திட்டான். "வண்ணங்களின் விழாவாக இது இருக்கிறது அதனால் நான் கொண்டாடினேன். எனக்கென்ன சொந்த புத்தி இல்லை என்று நினைத்தாயா? நீயும் பண்டிகைகள் கொண்டாடுபவன் தானே?" என்று பதில்க் கருத்திட்டான் அவன். இருவரும் சண்டை போடுமாற்போல் பதிலுக்கு பதில் சொல்லிக்கொண்டிருந்தனர். பார்ப்பதற்கு முக்கியத்துவம் இல்லாததது போலத் தெரியும் ஒரு விடயத்துக்கு இவர்கள் சண்டை போடுவது போலத் தோன்றலாம். ஆனால் இதன் பின்னால் ஒளிந்திருக்கும் உண்மைகளும் காரணங்களும் நாங்கள் அறியாதன.

உண்மையில் ஒருவன் பண்டிகைகள் தனது மகிழ்ச்சிக்காக மட்டுமே கொண்டாடப்படுகிறது, இதில் வேறு யாருக்கும் இலாபம் இல்லை என நினைத்துக் கொண்டிருக்கிறான். இன்னொருவன் பண்டிகைகள் தனது அடையாளம் இதில் வேறு யாருக்கும் உள்நோக்கம் எதுவும் கிடையாது என நினைத்துக் கொண்டிருக்கிறான். இருவரது எண்ணமும் சரியா? என்ற கேள்வி மனதில் எழுந்தது. சற்று ஆழமாக சிந்தித்தால் இருவரது எண்ணங்களும் பகுதியளவில் உண்மையே. ஆனால் இந்த பகுதியளவு உண்மைக்குப் பின்னால் மிக மோசமான பொய் ஒன்று மறைந்திருக்கிறது. இந்த உண்மையை அது பயன்படுத்திக் கொள்கிறது.

"இதில் வேறு யாருக்கும் இலாபம் இல்லை, இதில் யாருக்கும் எந்த உள்நோக்கமும் இல்லை." இதுதான் அந்தப் பொய். ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை பண்டிகைகள் பல உள்நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டன. சர்வதேச ரீதியில் கொண்டாடப்படும் முட்டாள்கள் தினம், மேலைத்தேய நாடுகளில் பரவலாக கொண்டாடப்படும் ஹலோவின் பண்டிகை இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளி போன்றன தமக்கேயான உள்நோக்கங்களைக் கொண்டுள்ளன. இவை வெறும் உதாரணங்களே.

காலப்போக்கில் எல்லா உள்நோக்கங்களையும் மேவி பொருளாதார நலன் என்பது வளரத் தொடங்கியது. பெருநிறுவனங்களும் வெகுஜன ஊடகங்களும் பொருளாதார ரீதியிலான இலாபங்களுக்காக பண்டிகைகளை உருவாக்குவதோடு அவற்றிற்கு மிகையான முக்கியத்துவம் அளிக்கின்றன. அத்துடன் ஏலவே கடைப்பிடிக்கப்பட்டு வந்த பண்டிகைகளிலும் பெரு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன. சில வருடங்களுக்கு முன் காதலர் தினமாக கொண்டாடப்பட்ட "வலன்டைன்ஸ் டே" இன்று காதலர் வாரமாக ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு செயலுக்கும் ஆனது என பிரிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் இலங்கையில் பரவத் தொடங்கியிருக்கும் ஹலோவின் பண்டிகையும் ஹோலிப் பண்டிகையும் எமது சமூகத்துடன் எந்தவித தொடர்புகள் இல்லாத போதும் பொருளாதார நோக்கங்களுக்காகவே பரப்பப்படுகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால் நாமோ "இது வேறு எவரதும் திணிப்பு இல்லை", "இதில் யாருக்கும் உள்நோக்கம் கிடையாது" என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றுகின்றோம். கையில் இருக்கும் பணத்திற்கு அதிகமாக எம்மை செலவு செய்யத்தூண்டும் இந்த நுகர்வுக் கலாசாரம் நாம் ஏமாற்றப்படுகிறோம், அதிகமாக செலவுகளை செய்யத் தூண்டப்படுகிறோம் என்றே தெரியாமல் நம்மீது எல்லாவற்றையும் திணித்துவிடுகிறது. நாம் விழிப்படையாதவரை பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் இன்னொருவனது இலாபத்துக்கே.

## அவிவேக சிந்தாமணி எழுதும்

# எம்டி உடன் எனது அனுபவங்கள்



எம்டிக்கு தகவற் தொழிநுட்பத்திற் தான் அதிகம் ஈடுபாடு என்று சொல்ல முடியாது. என்றாலும் இப்போது அதிகம் பேசப்படுகிற விடயம் அது என்பதால் அதைப்பற்றிப் பேசுவதில் அவனுக்கு உற்சாகம் மிகுதி. எனக்குக் கைத்தொலைபேசி. ஒரு வசதியும் தான் ஒரு தொல்லையும் தான். அலுவலகங்களில் ஊழியர்களுக்கு இலவசப் பாவனைக்காகத் தொலைபேசிகள் வழங்குவது அவர்களை 24 மணி நேரப் பணியாளர்களாக்குவதற்காகத்தான் என்ற சந்தேகமும் எனக்குண்டு. என்றாலும் தொலைபேசி என்பது என் போன்றவர்கட்குக் கொஞ்சம் சிக்கலான தொழிநுட்பமாகவே மாறி வருகிறது என்று நினைக்கிறேன்.

தொலைத்தொடர்பாடல் முன்னேற்றத் தால் எத்தனை எத்தனை புதிய காரியங்களைச் செய்யலாம் என்றெலாம் எம்டி எனக்கு விளங்கப்படுத்துவான். எனக்கு அவன் பயன்படுத்துகிற சொற்களுக்குக் கருத்தே தெரியாது. முதலில் ஒன்றிரண்டு தரம் ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கேட்டேன். அவனுடைய கதையின் ஓட்டத்திற்கு அது தடையாக இருந்ததால் அவன் அதை விரும்பவில்லை என்று நினைத்தேன். எனவே நான் அவ்விடயத்தில் அவனைக் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்துவதை நிறுத்தி விட்டேன். என்றாலும் இந்தத் தொழிநுட்பங்கள் செய்யக்கூடிய காரியங்கள் என்று சொல்லுகிற பலவும் ஏன் நடப்பதில்லை என்று எனக்கு விளங்குவதில்லை.

நவீன தொலைத்தொடர்பாடல் வசதிகள் இருப்பதால் மனிதர்கள் நீண்ட நேரம் செலவழித்துப் பயணித்துப் பணத்தையும் எரிபொருளையும் வீணாக்கத் தேவையில்லை என்று எம்டி சொன்னபோது அவனிடம் நான் "அப்படி என்றால் ஏன் மனிதர் இப்போது முன்னிலும் அதிகளவில் கொழும்புக்குப் பயணப்படுகிறார்கள்?" என்று கேட்டேன். "அதற்கு நீ தொலைத்தொடர்பாடலைக் குற்றம் சொல்கிறாயா?" என்று அவன் என்னை மடக்கினான்.

"தொலைத்தொடர்பால் தான் மனிதர் அலைக்கழிவினம் என்று நான் சொல்லவில்லை. இவ்வளவு திறமையான தொலைத்தொடர்பாடல் இருக்கிற போது ஏன் மனிதர் அலைக்கழிய வேணும்?" என்று பதிலடி கொடுத்தேன்.

"மனிதர் பொறுப்பாக நடந்தாற்தான் தொழிநுட்பம் மனிதர்க்கு உதவும்" என்று சமரசமாகப் பதில் சொன்னான். "அப்படியானால் மனிதரை உருப்படச் செய்ய எந்தத் தொழிநுட்பத்தாலும் இயலாது என்று சொல்கிறாயா?" என்று கேட்க யோசித்துவிட்டு, வீணாக ஏன் ஒரு சண்டையைக் கிளப்ப வேண்டும் என்று பேசாமல் விட்டுவிட்டேன்.

பின்பு கைத்தொலைபேசியின் பயன்பாடு பற்றிக் கதை திரும்பியது. இப்போதெல்லாம் கைத்தொலைபேசியிற் பேசியபடியே மனிதர் வீதிகளைக் கடப்பதும் வாகனங்களைச் செலுத்துவதும் கூட்டங்களின் போதும் நிகழ்ச்சிகளின் போதும் கைத்தொலைபேசியில் உரையாடுவதும் பற்றியெல்லாம் என் முறைப்பாடுகளைத் தொடர்ந்தேன். இப்போது கைத்தொலைபேசிப் பாவனை சிலருக்கு ஒரு வியாதி போல இருக்கிறது என்று சொன்னதை எம்டி மறுக்கவில்லை. ஆனால் கைத்தொலைபேசியின் பாவனையின் சமூகக் கேடுகளைப்பற்றி அவன் என்னுடன் முற்றாக உடன்படவில்லை.

"நீ இன்னமும் 19ம் நூற்றாண்டில் வாழுகிறாய்" என்று சொன்னான்.

"நான் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தாலும் இந்த நூற்றாண்டை விட அது நன்றாகத்தான் இருக்கும்" என்றேன்.

"உலகம் மாறுகிறது. தொழிநுட்பம் அதை மாற்றிக்கொண்டு போகிறது. நாங்களும் அதற்கேற்றபடி மாறினாலொழிய நாங்கள் வாழ முடியாது" என்று எச்சரிக்கும் தொனியில் போதித்தான்.

"அப்பன் எம்டி, மனிதர் உண்டாக்கின தொழிநுட்பத்தை மனிதரால் சரியாகப் பாவிக்க இயலாதென்றால் எங்கயோ பிழை இருக்கிறது இல்லையா?" என்று பதில் சொன்னேன். அவன் பதில் சொல்ல முன்பு தொடர்ந்து "எனக்குத் தொழிநுட்பம் தெரியாது. அதற்காக நான் தொழிநுட்பத்தில் பிழை சொல்லவில்லை. ஆனால் இந்தத் தொழிநுட்பம் யாரு டைய கையில் இருக்கிறது என்று நினைக்கிறாய்?" என்று கேட்டேன்.


"எல்லாத் தொழிநுட்பமும் விஞ்ஞானிகளும் தொழிநுட்ப வல்லுனர்களும் உண்டாக்கிறது தான். இப்போது அவர்கள்தான் உலகத்தின் புதிய திசை வழியைத் தீர்மானிப்பவர்கள்" என்று பெருமையோடு சொன்னான்.

"அவர்கள் எதை உண்டாக்கினாலும் கடைசியில் அதை யார் எடுத்துப் பிரயோசனமடைகிறார்கள்? யார் இலாபம் பெறுகிறார்கள்? யார் அதன் விளைவுகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்?... என்று கேள்விகளை அடுக்கினேன்.

எம்டிக்கு என்னுடைய கேள்விகள் சரியாக விளங்கியிராது என்றுதான் நினைத்தேன். தொழிநுட்பத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் வெளியே அவனிடம் எதிலும் பெரிய அக்கறை இல்லை என்பதை நான் யோசித்திருக்க வேண்டும்.

எம்டி மறுமொழியை யோசித்துக்கொண்டிருக்கையில் அவனிடம் "இந்தாப்பா, என்னிடம் இருக்கிற இந்தக் கைத்தொலைபேசியில் அரைவாசி நேரம் பிழை யான இலக்கம் அழைபடுகிறது. தேவையில்லாத இடங்களிலிருந்து அழைப்புக்களும் எஸ் எம் எஸ் செய்திகளும் வந்து ஒரே கரைச்சலாயிருக்கிறது. சும்மா ஒரு தேவைக்கு யாரையும் அழைக்கவும் அழைப்பைப் பெறவுமான ஒரு கைத்தொலைபேசியை வாங்க இயலுமா?" என்று கேட்டேன்.

கொஞ்சம் கடுமையான யோசனைக்குப் பிறகு, "ஏலுமென்றுதான் நினைக்கிறேன்" என்றான். "எங்கே?" என்று நான் கேட்க முதல், "ஆனால் நியாயமாகச் செலவாகும் என்று நினைக்கிறன்" என்றான்.



# மக்களின் ஆன்மா


–ஆதி

ஒவ்வொன்றாக காணாமல் போகும் நிலங்களிற்கோ
ஆறு கடல்களுக்காகவோ
உரத்த குரலின்றி விம்முகிற மனிதர்கள்

யாரோ பேசுகிறார்கள்
அறியாதவர்கள் கூட தமக்குள்ளே
பேசிக்கொள்கிறார்கள்
யாருக்கும் தெரியவேண்டாமென்றே
தமக்குள்ளாக பேசிக்கொள்கிறார்கள்

அவர்களின் இரைச்சலின் நடுவே
அலைகளின் சத்தம் கேட்பதில்லை
துடைத்து வீசும் டிஸ்யு போல
நிலங்களின் பின்னான வாழ்வைப் பேச்சின் நடுவே
கசக்கி வீசி விடுகிறார்கள்
பேச்சுவார்த்தை அறைகளில் உழைப்பாளிகளின்
வியர்வை வாசம் வீசுவதில்லை
எனினும்

எப்படியும் எம்மிடம் மீதமாக இருக்கும்
தேயாத நிலாக்களையும்
உதிராத நட்சத்திரங்களையும்
கொஞ்சம் சக்தியையும் கொண்டு – நம்
ஆன்மா இறைஞ்சும் அமைதியான வாழ்வைப்
படைத்து விடுவோம்



# பரதேசியின் பிதற்றல்கள்

இப்ப முந்தி மாதிரி அடிக்கடி அப்புவிட்டப் போகக் கிடைக்கிறேல்ல. சமானெல்லாம் சரியா விலையேறிப் போச்சு. கிடைக்கிற மாதச்சம்பளம் சாப்பாட்டுக்கே பத்தி றேல்ல. பிறகெங்க யாழ்ப்பாணம் போறதுக்குக் காசு. அதால அப்புவிட்ட போறேல்ல. எனக்கு அப்புவோட சரியான கோபம் எண்டதும் ஒரு காரணம். அவர்தான் "மோனை, கோழி மேச்சாலும் கொவன்மந்துல தான் மேக்க வேணும் எண்டு சொல்லி அரசாங்க வேலைக்குப் போகச் சொன்னவர். அதனால தான் இப்படிக் கஷ்டப்பட வேண்டிக்கிடக்கு. "இராச உத்தியோகம்" என்னை ஒட்டாண்டி ஆக்கிப்போடுமோ என்ட பயம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டு போகுது.

ஆச்சி போன கிழமை போன் பண்ணி ஏன் கனநாளா வரேல்ல எண்டு கேட்டவ. இந்தமுறை தைப் பொங்கலுக்கும் வரேல்ல எண்டு கவலைப்பட்டவ. ஆச்சி ஒரு நல்ல மனிசி. அந்த நாளிலேயே எல்லாரையும் வீட்டுக்குள்ள கூப்பிட்டு கதிரையில இருத்தித் தான் தேத்தண்ணி குடுக்கிறவ. இதாலேயே அக்கம் பக்கத்தில இருக்கிற சில ஆக்கள் ஆச்சியோட கதைக்கிறேல்ல. ஆச்சி எனக்கொருக்காச் சொன்ன வசனம் இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கு. அப்ப எனக்கு ஒரு நாலு வயசிருக்கும். "ராசா எல்லாரும் மனிசர்தான், கடவுள் எல்லாரையும் ஒரே மாதிரித் தான் படைச்சிருக்கிறார். பிறகு ஆக்களுக்குள்ள வித்தியாசம் பார்த்தா அது கடவுளுக்கே பொறுக்காது" எண்டு ஆச்சி சொன்னவ.

ஆச்சியின்ட நல்ல மனசுக்காகத் தன்னும் சரி, ஒருக்கா போய் அப்புவையும் ஆச்சியையும் பாத்திட்டு வருவமெண்டு யாழ்ப்பாணம் போனனான். அப்ப அப்பு சொன்ன விடுப்புக்கள் தான் என்னோட இன்னும் ஒட்டிக்கொண்டு நிக்குது.

அப்பு சொன்ன ஒரு கதை என்னை சரியாய் யோசிக்க வைச்சிட்டுது. போகேக்க கையோட இன்னொன்று புத்தகத்தையும் கொண்டு போனனான். அதில அப்பு சொன்னதை நான் எழுதியிருக்கிறன் எண்டு வாசிச்சுக் காட்டேக்க அப்பு சிரிக்கத் தொடங்கீட்டார்.

எனக்கு ஒரே குழப்பமா போயிட்டுது. ஏனப்பு சிரிக்கிறியள் எண்டு கேட்டன். "உந்த சனநாயகம் இப்ப யாழ்ப்பாணத்தில் சந்தி சிரிக்குதெல்லோ" எண்டார். என்னடா இது, அப்பு சனநாயகம் பற்றியெல்லாம் கதைக்கிறார் என்று யோசிக்கேக்க அப்பு சொன்ன கதை தெரியுமோ உங்களுக்கு.

தைப்பொங்கலுக்கு தியேட்டருக்கு புதுசா ஒரு படம் வந்ததாம். அந்தப் படம் சரியில்லையெண்டு ஒரு பேப்பக்காரன் எழுதிப்போட்டானாம். அதைப் பாத்து கோபப்பட்ட பொடியளெல்லாம் பேப்பர்க்கா ரனை மன்னிப்புக் கேட்கச் சொல்லி றோட்டில ஆர்ப்பாட்டம் பண்ணினதுகளாம். அதுதான் அப்பு சனநாயகம் என்னெல்லாம் செய்ய அனுமதிச்சிருக்கு எண்டு நினைச்சு சிரிச்சன் எண்டு விளக்கமா பிறகு சொன்னவர்.

யாழ்ப்பாணத்திலேருந்து பஸ்ஸில வரேக்க அப்புவிடம் சிரிப்புக்குப் பின்னால இருந்த காரணத்தைப் பற்றித்தான் யோசிச்சுக்கொண்டு வந்தனான். அரசாங்கம் வடக்கில் சனநா யகம் வந்திட்டுது எண்டு மேடை போட்டுக் கத்திறதில நியாயம் இருக்குமோ எண்ட சந்தேகம் வந்திட்டுது. ஒருவேளை நியாயம் இருக்கும் போல தான் கிடக்கு. ஏனென்டா நினைச்சதை எழுதிறதுக்கான சனநாயகமும் போராட்டம் செய்யுறதுக்கான சனநாயகமும் இருக்குத்தானே. கடைசியில நானே சனநா யகம் என்றால் என்னவென்று யோசிச்சு குழம்பிப் போய் நித்திரையாப் போனனான். சனநாயகம் நாட்டில முழிச்சிருக்கேக்க நான் நித்திரை கொள்ளுறதில பிழையில்லை தானே.



# ஒருவரை எத்தனை முறை கொல்ல முடியும்?

- ஊர்சுற்றி

அண்மையில் மீண்டுமொருமுறை முன்னாள் கியூப ஜனாதிபதி ஃபிடல் கஸ்ற்ரோ கொல்லப்பட்டார். ஒருவர் ஒருமுறைதானே கொல்லப்படலாம். ஆனால் உலக வரலாற்றில் காலத்துக்குக் காலம் ஊடகங்களாற் கொல்லப்பட்டு இன்னமும் அடிக்கடி கொல்லப்படுகின்ற ஒரு தலைவராகவும் மேற்குலகுக்குச் சிம்ம சொப்பனமாகவும் விளங்குபவர் ஃபிடல் கஸ்ற்ரோ.

நீண்டகாலமாக கஸ்ற்ரோ வெளியில் வரவில்லை என்றும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வில்லை என்றும் அவர் இறந்து விட்டார் என்றும் சில மாதங்களுக்கு முன்பு மேற்குலக ஊடகங்கள் கூறின. சில பத்திரிகைகள் அவர் படுத்த படுக்கையாக இருக்கிறார், அவரது மூளை இறந்துவிட்டது என்று எழுதின. இத்தனைக்கும் அவர் கியூப அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் வகிக்கவில்லை. தான் வகித்த ஜனாதிபதிப் பதவியை அவர் 2008ம் ஆண்டில் துறந்துவிட்டார். ஆனால் சில உள்ளங்கள் ஃபிடல் கஸ்ற்ரோவின் மரணத்துக்காக இன்னமும் ஏங்குவதைப் பார்க்கும் போது அவர் எத்தகைய சிம்ம சொப்பனமாக இருந்தார் என விளங்கும்.

ஓய்வில் இருக்கும் கஸ்ற்ரோ கியூபாவின் பிரதான தேசிய நாளிதழான கிரான்மாவில் பத்திகளை எழுதுவது வழக்கம். அவரது மரணம் குறித்த செய்திகளும் ஊகங்கங்களும் வெளியான பின்னணியில் "கஸ்ற்ரோ இறந்துகொண்டிருக்கிறார்" என்று மகுடமிட்டு ஃபிடல் கஸ்ற்ரோவே கிரான்மாவில் ஒரு பத்தியை எழுதியிருந்தார். அத்தோடு அவர் பங்குபற்றிய நிகழ்வின் புகைப்படங்களும் அப் பத்தியை அவர் வாசிக்கும் புகைப்படமும் வெளியாகி ஊகங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தன. ஃபிடல் கஸ்ற்ரோ, இன்னொரு முறை மீண்டும் பிறந்தார்.

1961ல் அமெரிக்கா நிகழ்த்திய "Bay of Pigs" எதிர்புரட்சியின் போதே அவர் முதன் முறையாக ஊடகங்களாற் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து அவர் ஊடகங்களாற் பல முறை கொல்லப்பட்டிருக்கிறார். இவ்வாறான செய்திகள் வெளியாகிற போது எமது ஊடகங்களும் அதை அப்படியே கொட்டை எழுத்துக்களில் மீளப் பிரசுரிக்கின்றன.

2006ம் ஆண்டு சனல் 4 தொலைக்காட்சி "638 Ways to Kill Castro" என்ற தலைப்பிலமைந்த ஆவணப் படமொன்றை ஒளிபரப்பியது. அவ்வாவணப்படம் 1959இல் இருந்து எவ்வாறெல்லாம் கஸ்ற்ரோ மீது கொலை முயற்சிகள் நடந்தன என்று பட்டியலிடுகிறது. இவை பற்றியெல்லாம் ஊடகங்களின் கவனம் செல்வதில்லை.

இந்த நிலையிலேயே இன்றைய ஊடக ஜனநாயகம் இருக்கிறது. நினைத்ததை நினைத்தபடியும் உண்மைகளைத் திரித்தும் பொய்களைச் சேர்த்தும் எவ்விதத் தயக்கமும் இன்றி ஊடகங்கள் வெளியிடுகின்றன. ஆனால் ஊடக சுதந்திரம் என்று வாய்கிழியப் பேசுகின்றன.

ஊடக ஜனநாயகம் பற்றிப் பேசப்புகுந்தால், ஊடகங்கள் மக்களை முட்டாள்களாக எண்ணிக் கொண்டு வெளி யிடும் செய்திகள் குறித்தும் பேச முடியும். இன்று அவர்கள் தெரிவிப்பதன் அடிப்படையிலேயே நாங்கள் தீர்மானிக்க வேண்டும் என்று ஊடகங்கள் விரும்புகின்றன. அவர்களது ஜனநாயகத்தின் அளவுகோல் அவ்வளவே. அவர்கள் தெரிவிக்காத செய்திகளை மக்களுக்கு சொல்லுவோர் யார் என்பதே எம்முன்னுள்ள சவால்.


கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கும் விளம்பரங்களுக்குமே போதிய நேரமும் இடமும் இல்லாமல் ஊடகங்கள் தத்தளிக்கிற போது மக்களுக்கான செய்திகளைச் சொல்வதற்கான வசதி ஊடகங்களுக்கு இருக்குமா? நமது ஊடக ஜனநாயகத்தின் சிறந்த பண்பாக இதைக் கொள்ளலாமா?

தனிமனித சுதந்திரத்தை பாதிக்கிற செயல்களை ஊடகங்கள் கூசாமற் செய்கின்றன. யாராவது ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதானால், அவர் தொடர்பான செய்திகளோடு பொய்களையும் சேர்த்து தலைப்புச் செய்திகளாகவும் முன்பக்கச் செய்திகளாகவும் ஊடகங்கள் அஞ்சாமல் வெளியிடுகின்றன. குறிப்பிட்ட மனிதரின் பெயரை விட அவரைப் பற்றிய ஏனைய செய்திகள் அனைத்தையும் வெளியிட்டுத் தங்கள் ஊடகச் சுதந்திரத்தைப் பேணுகின்றன.

ஆனால் அந்த மனிதர் குற்றம் எதுவும் அற்றவராக வெளியே வந்தால் ஊடகங்கள் அதைச் செய்தியாக வெளியிடுவதில்லை. தாங்கள் தவறாக வெளியிட்ட செய்திகட்கு மன்னிப்புக் கேட்பதென்பது எங்கள் ஊடகங்களின் அகராதியிலேயே கிடையாது. தனி மனிதச் சுதந்திரத்தின் எல்லைகளை மீறவும் பறிக்கவும் ஊடக ஜனநாயகத்தின் பெயராலும் ஊடகச் சுதந்திரத்தின் பெயராலும் இடம் இருக்கிறது அல்லவா? அவ்வாறுள்ளபோது ஃபிடல் கஸ்ற்ரோ கொல்லப்படுவதும் புதிதில்லைத்தானே, ஏனெனிற் தெரிவிப்பது மட்டும் அவர்கள், தீர்மானிப்பது நீங்கள் அல்லவா.

தமிழ் ஊடகங்கள் எங்களுக்கு காட்டுகிற உலகம் என்பது வெறுமனே அமெரிக்கா, லண்டன், புது டெல்லி, தமிழ்நாடு என்பவற்றுடன் மட்டும் முடிந்துவிடுகின்றது. என்ன செய்வது.

சில நாட்களுக்கு முன் ஊடகமொன்றிற் பணிபுரிகின்ற எனது நண்பர் ஒருவர் அவசர அவசரமாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு "ஃபிடல் கஸ்ற்ரோ செத்துப் போய் விட்டார். அவரது லைப் ஹிஸ்ற்றி பற்றிக் கொஞ்சம் சொல்லு" என்று கேட்டார். நான் அவரிடம் திருப்பிக் கேட்டேன்: "இப்போது அவர் செத்தது எத்தனையாவது முறை?"



# போதகர்

–ச. ரகு


உனது கனவை கட்டியெழுப்பு என்கிறீர்கள்
இல்லாவிட்டால் தனது கனவைக் கட்டியெழுப்ப
உன்னை ஒருவன் வேலைக்கு அமர்த்துவான்
என்றும் சொல்கிறீர்கள்

மூன்று வேளை உணவே என்கனவு
மூன்று வேளை உணவு உண்ணும்
கனவுக்காக மட்டும் வேறொருவன்
என்னை வேலைக்கு அமர்த்தப் போவதில்லை
என்ற உண்மை யாரும் அறியார் என்று எண்ணி
உங்கள் உபதேசத்தை தொடர்கிறீர்கள்

கனவைப் பெரிதாய்க் காண்
கணக்குப் போட்டு வாழ்
கஷ்டப்பட்டு உழை
என்றெல்லாம் உரைக்கிறீர்கள்

கண்ட கனவே பலிக்கவில்லை,
மூன்று வேளை உணவிற்கே காசில்லாதபோது
கணக்குப் போட்டு வாழ காசேது,
என் அப்பன் தாத்தன் பூட்டன் எல்லாம்
என்னைவிட கடும் உழைப்பாளி
அவர்களும் மூன்றுவேளை உண்டதில்லை.
இவையெல்லாம் நான் சொன்னால்...

'விதி வலியது'
என்று பழைய பொய்யை சொல்கிறீர்கள்
என் செய்வேன்...




# சவால்களை எதிர்கொள்ளும் நவீன கால விளையாட்டுக்கள்

-க. கோபி

ஆரம்ப காலங்களில் பொழுதைக் கழிப்பதற்காகவும், உடற்பயிற்சிக்காகவும் என ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுக்கள் காலங்காலமாக குழுக்களுக்கிடையிலான, நாடுகளுக்கிடையிலான போட்டிகளாக மாறியதோடு மாபெரும் வர்த்தகப் பெறுமதி கொண்டவையாகவும் மாறின. ஆனாலும் வர்த்தகம், அரசியல் எல்லாவற்றையும் தாண்டி விளையாட்டுணர்வும், போட்டித்தன்மையும் பெரும்பாலான விளையாட்டுக்களில் காணப்பட்டதன் காரணமாக அவை தொடர்ந்தும் இரசிக்கப்படுவனவாகவும் காணப்படுகின்றன.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்த எம்மவர்களுக்கு கிரிக்கெட் போட்டிகள் பிரதானமானவையாகக் காணப்பட்டதோடு, உதைபந்தாட்டம் உட்பட இன்னும் சில விளையாட்டுக்களும் அதிகம் இரசிக்கப்படுபவையாகக் காணப்படுகின்றன. 1983ம் ஆண்டு இந்தியக் கிரிக்கெட் அணி உலகக்கிண்ணத்தை வென்றதன் காரணமாக இந்தியாவிலும், 1996ம் ஆண்டு இலங்கை அணி உலகக்கிண்ணத்தை வென்றதன் பின்பு இலங்கையிலும் கிரிக்கெட் தேசிய உணர்வாக மாறியது.

போட்டிகள் வெறுமனே போட்டிகளாக இல்லாமல் இரு நாடுகளுக்கிடையிலான மோதலாக மாறியது. இது ஒரு விதத்தில் விளையாட்டின் ஆக்ரோஷத்தை ஊக்குவிக்க உதவியிருந்தாலும், இதன் பக்க விளைவுகள் மோசமானவை.

1996ம் ஆண்டு இந்தியாவின் மிகச்சிறந்த மைதானங்களில் ஒன்றாகக் கருதப்படும் கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வியடையும் கட்டத்தில் இந்திய இரசிகர்கள் மைதானத்தின் இருக்கைகளைக் தீயிட்டதும், அவுஸ்ரேலிய - இந்திய அணிகளுக்கிடையில் அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற டெஸ்ற் தொடரொன்றில் வீரர்களுக்கிடையிலான வாய் மோதல் தேசியப் பிரச்சினை போன்று மாறி எப்போதெல்லாம் இரு அணிகளும் சந்திக்கும் போதும் எதிரணி வீரர்களை இரசிகர்கள் மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தி அழைக்கத் தொடங்கியமையும் இவற்றின் விளைவுகளே. ஆனால் இவை எல்லாவற்றையும் தாண்டி கிரிக்கெட் என்பது எம்மவர்களுக்குப் பிடித்தமானதொன்றாகவே காணப்படுகின்றது.

ஆனால் இவற்றிற்கெல்லாம் கேள்விகளை எழுப்பக்கூடிய நிலையை அவ்வப்போது எழும் ஆட்ட நிர்ணயக் குற்றச்சாட்டுக்களும், நாட்டைப் பிரதிநித்துவப் படுத்துவதை விட பணங்கொழிக்கும் கழகங்களை வீரர்கள் பிரதிநித்துவப்படுத்துவதை விரும்பும் நிலையும் எற்படுத்திவிடுகின்றன. சில விருப்பமின்மை உணர்வுகளை அவை எழுப்பியதோடு, கணிசமான விளையாட்டு இரசிகர்களைக் கொஞ்சமாவது பாதித்திருந்தன. மேலே குறிப்பிட்ட விடயங்களுக்காக இரசிகர்கள் விளையாட்டுக்களை வெறுத்திருந்தார்கள் என்று குறிப்பிட முடியாவிட்டாலும், குறிப்பிட்டளவு

**விளையாட்டுக்கள் அதிக இரசிகர்களை ஈர்ததுள்ளதை உணர்ந்து கொண்டுள்ள முதலாளிகளும், மோசடியாளர்களும் தங்கள் கவனத்தை விளையாட்டுக்கள் மீது திருப்ப, வழக்கமான போட்டித்தன்மை என்பது மாற்றமடைய வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.**

இரசிகர்களை சிறிது காலத்திற்காவது விளையாட்டுக்களை விட்டுத் தள்ளியிருக்கச் செய்திருந்தன என்பதை மறுக்க முடியாது.

கிரிக்கெட் போட்டிகள், உதைபந்தாட்டங்கள், றக்பி போட்டிகள், கூடைப்பந்தாட்டங்கள், மல்யுத்தப் போட்டிகள், பூப்பந்துப் போட்டிகள் உட்படப் பல விளையாட்டுகளில் ஆட்ட நிர்ணயங்கள், ஸ்பொட் ஃபிக்சிங் என்பன இடம்பெறுகின்றன. அவை பல்வேறு காரணங்களுக்காக இடம்பெறுகின்றன.

பணத்தைப் பெற்றுக் கொண்டு போட்டிகளைத் தோற்பது மிக முக்கியமானதாகக் காணப்பட, வேறு காரணங்களுக்காக போட்டிகளைத் தோற்பதையும் ஆட்ட நிர்ணயம் என்ற வகைக்குள்ளேயே சேர்த்துக் கொள்ள முடியும். குறிப்பாக இறுதியாக இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் சீனாவைச் சேர்ந்த வீராங்கனைகள் அடுத்த சுற்றுப் போட்டிகளில் இலகுவான வீராங்கனைகளைச் சந்திக்க வேண்டுமென்பதற்காகப் போட்டிகளை வேண்டுமென்றே தோற்றிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு போட்டிகளிலிருந்து வெளியேற்றப் பட்டிருந்தார்.

விளையாட்டுக்கள் அதிக இரசிகர்களை ஈர்த்துள்ளதை உணர்ந்து கொண்டுள்ள முதலாளிகளும், மோசடியாளர்களும் தங்கள் கவனத்தை விளையாட்டுக்கள் மீது திருப்ப, வழக்கமான போட்டித்தன்மை என்பது மாற்றமடைய வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து பிரீமியர் லீக் காற்பந்தாட்டப் போட்டிகளாக இருக்கலாம், இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகள், பங்களாதேஷ் பிரீமியர் லீக் போட்டிகள், பிக்பாஷ் லீக், கரீபியன் பிரீமியர் லீக் என பணத்தைப் பிரதானமான நோக்கமாகக் கொண்டு போட்டித் தொடர்கள் விளையாட்டுக்களை ஆக்கிரமித்திருக்கின்றன.


முன்பெல்லாம் 5 நாட்கள் கொண்ட டெஸ்ற் போட்டிகளில் ஆண்டு முழுவதும் விளையாடி வீரர்கள் உழைத்த பணத்தை ஓரிரு வாரங்களில் 20 ஓவர்கள் கொண்ட டுவென்டி டுவென்டி தொடரான இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் பங்குபற்றிப் பெற்றுக் கொள்கின்றனர்.

இதன் காரணமாக இவ்வாறான டுவென்டி டுவென்டி போட்டிகளின் பக்கம் வீரர்களின் ஆர்வம் தூண்டப்படுவதும், ஓய்வினை அறிவித்த வீரர்கள் பலர் இத்தொடர்களில் பங்குபற்றுவதற்காக ஓய்விலிருந்து வெளியே வந்து போட்டிகளில் பங்குபற்றியமையையும் கடந்த காலங்களில் கண்டிருக்கிறோம்.

இந்தக் காலகட்டத்திலேயே தற்போது விளையாட்டுக்கள் முழுமையான சவாலை எதிர்கொண்டு நிற்கின்றன. வீரர்கள் பணத்தினைச் சரியான வழியில் ஈட்டிக்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டிய தேவையை சம்பந்தப்பட்ட தரப்பினர் உறுதிப்படுத்த வேண்டியுள்ளதோடு, தவறுகள் இடம்பெறும் போது இலகுவாகக் கண்டுபிடிக்கும் முறைகளையும் அமுல்படுத்த வேண்டிய தேவையையும் இவ்வாறான சவால்கள் உணர்த்தி நிற்கின்றன.

பாகிஸ்தான் வீரர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு முறையற்ற பந்துகளை வீசிய போதும், இந்தியாவின் உள்ளூர் வீரர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு முறையற்ற பந்துகளை வீசிய போதும், இந்தியன் பிரீமியர் லீக்கின் விதிகளை மீறி அதிக பணத்தைப் பெற வீரர்கள் முயன்ற போதும் அதிகாரிகளோடு, காவல்துறையினரோ அவற்றைக் கண்டுபிடித்திருக்கவில்லை, மாறாக ஊடகங்கள் அக்குற்றங்களை வெளிப்படுத்திய பின்னரே அதிகாரிகளாலும், நீதிமன்றங்களாலும் செயற்பட முடிந்திருந்தது. ஊடகங்கள் தவறுகளை வெளிப்படுத்தும் வரை காத்திருக்காமல் அவற்றை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டிய கடமையை நீதித்துறையினர் கொண்டுள்ளதோடு, நாங்கள் அனைவரும் விரும்பும் விளையாட்டுக்களில் விளையாட்டுணர்வு கெட்டுப் போகாமல் பாதுகாக்கப்படுவதையும் வீரர்களும், அதிகாரிகளும் உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அழுத்தங்கள் நிறைந்த நவீன வாழ்வில் எங்களுக்குப் பிடித்த வீரர் விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதையும், சதங்களைக் குவிப்பதையும், பிடிகளை எடுப்பதையும், கோல்களை அடிப்பதையும், கோல்களைத் தடுப்பதையும் மகிழ்வுடன் கண்டுகொள்ள விரும்புகிறோம், அவை நேர்மையான விளையாட்டுக்காக இருக்க விரும்புகிறோமே தவிர அவை நாடகங்களாக மாறுவதை நாங்கள் யாரும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதே உண்மை.



# இந்தப் பொண்ணுங்களே இப்படித்தான் தெரிஞ்சுபோச்சுடா...

-மு. மயூரன்

**"பெண்கள் உள்ளங்கள் நிலைமாறி கிளைமாறுமே"**

**"வேணாம் மச்சான் வேணாம் இந்த பொண்ணுங்க காதலு"**

**"பொம்பளைங்க காதலைத்தான் நம்பி விடாதே...."**

இவ்வாறான பாடல்கள் தென்னிந்தியத் தமிழ் சினிமாவில் அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரை வந்துகொண்டே இருக்கின்றன. இவ்வாறான பாடல்களை மட்டுமே தொகுத்துத் தெருவோர இறுவட்டுக் (CD) கடைகளில் விற்கிறார்கள். அவற்றை நிறைய ஆண்கள் வாங்குகிறார்கள். பெண்களைக் கண்டால் இப்பாடல்களின் ஒலிய ளவைக் கூட்டி விடுகிறார்கள். தாம் வைத்திருக்கும் ஆட்டோக்களிலும் சுவர்களிலும் பொது இடங்களிலும் இவ்வாறான பாடல் வரிகளை எழுதி வைக்கிறார்கள். தமிழில் மட்டுமல்ல, சிங்களத்திலும் இவ்வாறுதான் இருக்கிறது. இவ்வகைப் பாடல்கள் எல்லாவற்றிலும் இருக்கும் பொதுவான கருத்து என்னவென்றால், பெண்களை நம்பக்கூடாது என்பதும் பெண்கள் எளிதில் ஏமாற்றி விடுவார்கள் என்பதும்தான்.

நண்பரொருவர் Facebook இல் இப்படி எழுதியிருந்தார்: "நகைமுரண்: பொம்பளைங்க காதலைத்தான் நம்பிவிடாதே என்ற பாடலை தி-னமும் பாடிக்கொண்டு இருந்த நண்பன் முதலில் திருமணம் செய்துகொண்டது..." இதிலே நண்பர் சொல்லவருவதைப் போல, நடைமுறைக்கு ஒத்து வராத இவ்வாறான பாடல்கள் இரசிக்கப்படுவதற்கும் தொடர்ந்தும் வெளிவந்துகொண்டிருப்பதற்கும் கார ணம் என்ன? இது ஆழமான ஆய்வுக்குரிய கேள்வி.

காதலுறவு என்று வரும்போது ஆண்களும் பெண் களும் ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படத்தான் செய்யும். இதில் பெண்களை மட்டுமே குறை சொல்லுகிற நிலை ஏன்? திரைப்பாடல்களில் பெண்ணின் காதல் தோல்விப் பாடல்கள் கரைந்து கெஞ்சிக் கண்ணீர் உகுப்பதாகவும் ஆண்களின் காதல் தோல்விப் பாடல்கள் பெண் மீது குற்றம் சாட்டுவதாகவும் ஏன் அமைகின்றன? எளிதாகச் சொல்வதானால், இப்பாடல்களை உருவாக்குபவர்களும் இப்பாடல்களின் இரசி கர்களாக இருப்பவர்களும் இப்பாடல்களைக் காவித்திரிபவர்களும் ஆண்களாகவே இருக்கிறார்கள். இந்த ஆண்களுக்கு, ஆண்-பெண் உறவொன்றில் ஒரு பெண் உறவை முறித்துக்கொள்ள விரும்புவதென்பது அப் பெண்ணின் குற்றமாகவும், ஒட்டுமொத்தப் பெண்களின் இயல்பாகவும் தோன்றுகிறது. திரைப்பாடல்களில் மட்டும்தான் இந்நிலை என்றில்லை. மத நூல்கள் தொடக்கம் பழந்தமிழ் இலக்கியங்கள் வரை இந்தப் பார்வை உள்ளது.

நீண்டகாலமாக ஆண்கள் மனதில் மதங்கள், இலக்கியங்கள், நீதி நூல்கள் வாயிலாகப் பதிக்கப்பட்டு வரும் கருத்தொன்றின் தொடர்ச்சியே இந்த மனநிலையாகும். அது என்ன கருத்து? பெண்ணினுடைய உடலும் உணர்வுகளும் ஓர் ஆணுக்கே சொந்தமானவை ஓர் ஆணுக்கே சமர்ப்பிக்கப்பட வேண்டியவை வேறோர் ஆணைத் தேர்ந்தெடுக்கும் உரிமையோ, கொண்ட ஆணை விட்டு விலகும் உரிமையோ பெண்ணுக்குக் கிடையாது என்பதே அந்தக்கருத்து. ஆணுக்கு இவ்வாறில்லை. ஆண் தனது உடல் தொடர்பாகவும் உணர்வுகள் தொடர்பாகவும் முடிவெடுப்பதற்கு முழுச்சுதந்திரம் உடையானாயிருப்பான்.

**தத்தை விடு தூது வெளிவந்து 122 ஆண்டுகளாகின்றன. மரபார்ந்த பழைய ஆணாதிக்கப் பார்வையை எதிர்த்து, மதிப்பார்ந்த புதிய பார்வையை அது கொண்டிருக்கிறது. ஆனால் 122 ஆண்டுகளுக்குப் பிறகும் "பொம்பளைங்க காதலைத்தான் நம்பிவிடாதே" என்று முட்டாள் தனமாக உளறிக்கொண்டிருக்கின்றன சினிமாப்பாடல்கள்.**

இதனாற்தான் ஒரு பெண் காதலுறவிலிருந்து வில குவதும் வேறொரு காதலனைத் தேர்ந்தெடுப்பதும் மிகப்பெரிய மோசடியாகவும் பாவமாகவும் பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்தப் பெண்கள் மீதே இந்தப் பழி சுமத்தப்படுகிறது. இதன் உச்சகட்டம் என்னவென்றால், பெண்ணின் சமூக நிலை காரண மாகவும், அவள் மீதான அடக்குமுறை காரணமா கவும் காதலனைப் பிரிய நேரும் பெண்ணுக்கும் மோசடிக்காரி முத்திரை குத்தப்படுவதாகும்.

இவ்வாறுதான் அன்று முதல் இன்றுவரை இலக்கியங்கள் இருந்து வருகிறதா? மனிதர்கள் அனைவரும் சுயமரியாதை கொண்டவர்கள் என்றும் மனிதரிடையே ஏற்றதாழ்வு காட்டுவது தவறென்றும் ஆணைவிடப் பெண் தாழ்ந்தவள் அல்ல எனவும் மனிதர்கள் சிந்திக்கத் தலைப்பட்ட நவீன காலத்தில் இந்த மரபான பாரபட்சப் பார்வைக்கு எதிரான இலக்கியங்கள் வெளிவரத் தொடங்கின.

இலங்கையில் திருகோணமலையைச் சேர்ந்த கவி ஞர் தி. த. சரவணமுத்துப்பிள்ளை 1892ம் ஆண்டு வெளியிட்ட "தத்தைவிடு தூது" ஒரு காதல் தோல்விக் காவியமே. சரவணமுத்துப்பிள்ளையின் காதலி அவளது வீட்டில் ஏற்பட்ட எதிர்ப்புக் காரணமாக சரவணமுத்துப்பிள்ளையை விட்டுவிட்டு வேறொரு ஆணைத் திருமணம் செய்ய உடன்பட்டாள். இதனால் ஏற்பட்ட காதற் தோல்வியிலேயே தத்தைவிடு தூது எழுந்தது. அதில் ஒரு பாடல் இவ்வாறு வரும்..

**"என்னிதயந் தனதாக்கி என்னுயிருந் தானேயாய்**
**என்னையிவண் வருத்துதறா னிவட்கழகோ பைங்கிளியே**
**மன்னிதுவோ பெண்கள்குண மாற்றா ரினியரன்றே.."**

**( 28)**

எனது இதயத்தை தனதாக்கி, என் உயிராக அவள் மாறிப்போனபின் என்னை இப்ப வருத்துவது தான் இவளுக்கு அழகோ கிளியே? இதுதானே பெண்களின் குணம். மற்றவர்களல்லவா அவர்களுக்கு இனியவர்கள்?

பெண்விடுதலை பேசும் தத்தை விடுதூது பிரபந்தத்தில் இந்தப்பாடல் அதிர்ச்சியையே ஏற்படுத்துகிறது. உதட்டளவில் பெண் விடுதலை பேசிவிட்டு கடைசியில் சரவணமுத்துப்பிள்ளையும் சாதாரண ஆணைப்போல சிந்திக்கிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால், அடுத்த பாடலோ எமது உச்சியில் ஓங்கி அடிக்கிறது..

**"அந்தோ தவறுதவ றறியா துரைத்தனன்யான்**
**பைந்தாரப் பசுங்குழலாள் பாவமறியாள் கிளியே**
**தந்தைதா யாரிலரேற் றறியாளென் பாங்கருடன்**
**வந்தாள் மகிழ்ந்தாள் வதிந்தாள் பசுங்கிளியே..."**


**(29)**

ஐயோ தவறு தவறு தெரியாமல் சொல்லிவிட்டேன் அவள் பாவமறியாதவள். தாயும் தந்தையும் மட்டும் இல்லையென்றால் என் எதிரிகளோடு இருக்க மாட்டாள். என்னுடன் வந்து வாழ்ந்திருப்பாள் என்கிறார். காதற் தோல்வியின் வலியுடனும் ஏமாற்றத்துடனும் கனக்கும் இதயத்திலிருந்து, காதலி யின் முடிவுக்கான சூழ்நிலைகள் என்னவாயிருக்கும் என அவள் நிலையில் நின்று ஆராய்கிறது கவிஞரின் மனது. இதுதான் காதலில் உயர் ஜனநாயகப் பண்பு. தூய அன்பும் காதலும் ஒருவரை ஒருவர் மதிக்கும் உயர்ந்த ஜனநாயக நிலைக்கு வளர்ச்சியடைந்திருக்கும் தன்மை இது.

இந்தக் கவிதை வெளிவந்து 122 ஆண்டுகளாகின்றன. மரபார்ந்த பழைய ஆணாதிக்கப் பார்வையை எதிர்த்து, மதிப்பார்ந்த புதிய பார்வையை இக்கவிதை கொண்டிருக்கிறது. ஆனால் 122 ஆண்டுகளுக்குப் பிறகும் "பொம்பளைங்க காதலைத்தான் நம்பி விடாதே" என்று முட்டாள்த்தனமாக உளறிக் கொண்டிருக்கின்றன சினிமாப்பாடல்கள். இந்தப் பாடல்கள் எத்தனை நூற்றாண்டுகளுக்கு முந்தைய பழங்கால ஆதிக்கப் பார்வையினைக் கொண்டிருக்கின்றன என எண்ணிப்பாருங்கள்.

எம்மை பழைய மூடத்தனங்களில் இருந்து விடுவித்துப் புதிய வளர்ச்சியடைந்த திசைநோக்கிக் கூட்டிச்செல்லும் கலையினை ஆதரித்து வளர்க்கப் போகிறோமா, பிற்போக்காக, பழங்காலத்துக்குக் கூட்டிப் போய், புதிய வளர்ச்சிகளை எல்லாம் எம்மிடமிருந்து இல்லாமலாக்கும் மோசமான கலை யினை ஆதரிக்கப்போகிறோமா?

தெரிவு எமது கையிற்தான் உள்ளது.



# தெருட்பாணன் பக்கங்கள்

**பாணர் வாழ்க்கை நிலையற்று பசித்தலையும் வாழ்க்கையாகவே இருந்திருக்கிறது. தமிழ் இலக்கியம் பாணர்களைப் பேசும் இடந்தோறும் அவர்களுடைய பசியைப் பற்றியும் மறக்காமல் சொல்லிச் செல்கிறது. இந்தப் பக்கங்கள் அவ்வாறலையும் பாணனது எண்ண அலைகளது பதிவுகளாக இங்கு விரியும். புரட்டிப் பாருங்கள்...**

### தமிழர் யார் என்பது பற்றி...

கடந்த வாரம் தமிழ்ப் பத்திரிகையையொன்றைப் புரட்டுகிற போது நேர்காணல் ஒன்றைக் காணக் கிடைத்தது. அதில் கேட்கப்பட்ட ஒரு கேள்வி பற்றி இங்கு குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். அந்தக் கேள்வி பதில் இதுதான்:

**கேள்வி:** தமிழர் என்ற பதம் எதனைக் குறிக்கிறது?
**பதில்:** தமிழர் பண்பினை மதிக்கிற அனைவரும் தமிழர் என்ற பதத்தினையே இது குறிக்கிறது.

இது இன்றைய தமிழ் ஊடகங்கள் குறித்த நல்லதொரு குறுக்குவெட்டுத் தோற்றத்தினைத் தருவதற்கு போதுமானது. இன்று நேர்காணல்கள் தேவை கருதிச் செய்யப்படுவதில்லை. அவை பெரும்பாலும் பிரமுகர்களை மகிழ்விக்கவும் பக்கங்களை நிரப்பவுமே பயன்படுகின்றன. பத்திரிகைகளில் வருகின்ற பெரும்பாலான நேர்காணல்களில் சுயவிளம்பரமும் சுயபுராணமும் முதுகு சொறிதல்களுக்கும் அப்பால் எதுவும் இருப்பதில்லை. அதையும் மீறி பயனுள்ள நேர்காணல் என எதிர்பார்க்கப்படும் நபரிடம் பொருத்தமான கேள்விகள் கேட்கப்படுவதில்லை. பொதுவாக நேர்காணல்களில் கேள்விகள் தொடர்பறா வண்ணம் கேட்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு கேள்விகள் கேட்கப்படுவதில்லை. ஒரு பதிலிலிருந்தே அடுத்த கேள்வி பிறக்கிறது. அவ்வாறு தொடர்பறாமல் கேள்விகள் கேட்பதற்கு நிறையத் தயாரிப்பும் கொஞ்சம் புத்திசாலித்தனமும் தேவை.

இனி நான் வாசித்த கேள்வி பதிலுக்கு வருகிறேன். தமிழர் என்ற பதத்தின் பொருள் பற்றிக் கேட்பதற்கு நேர்காணல் வழங்குபவர் ஒரு தமிழறிஞரோ அல்லது துறைசார்ந்தவரோ கிடையாது. இதிலிருந்து நேர்கண்டவரின் அறிவின் அளவுகோலைப் புரிந்து கொள்ளலாம். அதற்கு வழங்கப்பட்ட பதிலிலிருந்து நேர்காணல் வழங்கியவரை விளங்குவதில் சிரமங்கள் இரா.

தமிழர் பண்பினை மதிக்கும் அனைவரும் தமிழர் என்றால் தமிழர் பண்பை மதிக்கின்ற அமெரிக்கக்காரன், சீனாக்காரன், ஆபிரிக்கக்காரன் எல்லாரையும் தமிழர் என்று கொள்ளலாம் போல. இன்னும் விளக்கமாய் சொல்வதென்றால் ஐ.நாவில் தமிழருக்காக தீர்மானம் கொண்டுவருவதாய்ச் செல்கின்ற அமெரிக்கக்காரன் அதற்கு ஆதரவுதருகின்ற எல்லோரும் தமிழர்கள் என்று கொள்ள வேண்டும்.

இன்னொன்று..... பதிலை மீண்டும் வாசித்துப் பாருங்கள். அதில் இலக்கணப்பிழை இருப்பதை உணர்வீர்கள். ஒரு மொழியை இலக்கணப் பிழை இல்லாமல் எழுத அனுமதிக்கிறது தான் ஊடக சுதந்திரம் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். "மெல்லத் தமிழ் இனிச் சாகும்". பாரதி சொன்னது சரிதான்.

### ஒரு குட்டிக்கதை...

இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. தனது படைவீரர்களின் மனநிலை எவ்வாறு இருக்கிறது என்று அறிய விரும்பிய ஹிட்லர் போர்க்களமொன்றுக்குச் சென்று பார்க்க முடிவெடுத்தார். அவர் போர்களத்திற்குச் சென்று போது கடுங்குளிரின் நடுவே படைவீ ரனொருவன் குளிரையும் பொருட்படுத்தாமல் போரிட்டுக்

கொண்டிருப்பதைக் கண்டு வியந்து அவனருகில் சென்று "எப்படியிருக்கிறாய்?" என்று கேட்டார். "நலமாயிருக்கிறேன் தலைவரே, மூன்று வேளையும் நேரந்தவறாமல் உணவு கிடைக்கிறது" என்றான் படைவீரன். மகிழ்ந்துபோன ஹிட்லர் அவனைப்பார்த்து "உனது கடைசி ஆசை என்ன" என்று கேட்டார். அவன் "தலைவரே அடுத்த குண்டு எனதருகில் விழும்போது நீங்கள் என்கூடவே இருக்க வேண்டும்" என்று சொன்னான்.

## மருண்டவன் கண்ணுக்கு

கொஞ்சக் காலத்துக்கு முன் காலிமுகத்திடலில் நோர்வேஜியத் தூதகரத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சிக்கு நானும் எனது நண்பனும் சென்றிருந்தோம். வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த இசைக்குழுக்கள் பங்குபற்றுவதால் வேறுநாட்டு இசையை ரசிக்கக் கிடைக்கும் என்ற ஆர்வத்தால் கொட்டுகிற மழையில் நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தோம். நிகழ்ச்சியை சிங்கள மொழியில் ஒருவரும் தமிழ் ஆங்கில மொழிகளில் இன்னொருவரும் என இருவர் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தனர். நிகழ்வின் தொடக்கத்தில் தமிழில் அறிவிப்பை மேற்கொண்ட அறிவிப்பாளர் சிறிது நேரத்தின் பின்னர் ஆங்கிலத்தில் மட்டுமே அறிவிப்பை மேற்கொண்டார். நிகழ்வைப் பார்க்க தமிழர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்று எண்ணியிருப்பார் போலும். ஆனால் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் "சமூகங்களுக்கிடையே இசையால் மீளிணக்கத்தை உருவாக்குவதே இந்நிகழ்வின் நோக்கம்" என அறிவித்தார்கள். பலஸ்தீன இசைக்குழுவை சிங்கள மொழியில் அறிமுகப்படுத்திய அறிவிப்பாளர் "இவர்கள் பலஸ்தீனப் பயங்கரவாதிகளுக்கும் இசைக்கிறார்கள்" என்றார். நான் ஒருகணம் அதிர்ந்துவிட்டேன். சிறிது நேரத்தின் பின் அருகில் அமர்ந்திருந்த நண்பர் எங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரல் துண்டுப்பிரசுரத்தில் இந்த இசைக்குழு பற்றி ஆங்கிலத்தில் எழுதியிருந்த குறிப்பைக் காட்டினார். அதில் **This group also performs in Palestine territories** என்று எழுதப்பட்டிருந்தது.

இப்போது எல்லோருக்கும் குழப்பமாகத்தான் இருக்கிறது. கார்டூனில் சொல்லப்பட்டுள்ளது போல...

## இரண்டு கவிதைகள்

**01**


கோயிலில் விகாரையில்
மசூதியில் தேவாலயத்தில்
எனப் பேதமின்றி
வந்தமர்ந்து செல்லும் பறவைகள்
வேறுபாடின்றி
தமக்குள் பேசிக்கொண்டன
வேறுபாடுகளுடன்
வந்துபோகும்
மனிதர்களைப் பார்த்து

**02**

அதிகாலை:
பாணுக்கு வரிசையில் நிற்கிறேன்
நேரம் கடக்கிறது
கடை திறக்கவில்லை இன்னும்
அருகில் நின்றவர் சொல்கிறார்:
"நேரத்துக்கு கடை திறக்காமல்."
மற்றவர்களைப் பற்றி யோசனையே இல்லை"

காலை:
அவசர அலுவலொன்றிற்காய்
அலுவலகமொன்றினுள் நுழைகிறேன்
ஒரே கூட்டம்
விசாரிக்கிறேன்
"பணி செய்ய வேண்டியவஉ
பணியை விடுத்து
தேநீர் பருகுகிறார்"
யார் அவர்?
எட்டிப் பார்க்கிறேன்
காலையில் திட்டிய
அதே மனிதன்

பாணன் இசைப்பான் பாடினியோடு...





# கொலைகாரன்? அரசன்?

### நாம் வாசிக்காத வரலாறு.

# இரண்டாம் லியோ போல்ட்

**-க. ஆதித்தன்**

வரலாறு வென்றவர்களாலேயே எழுதப்படுகிறது என்பது மிகவும் புகழ்பெற்ற வாசகம். எழுதப்படும், எழுதப்பட்ட வரலாறு பக்கச்சார்பானது என்பதே அதன் எளிமையான அர்த்தம். எழுதுபவர்கள் தாம் சார்ந்திருக்கும் அரசியல் நலனை பாதுகாக்கும் வகையில் திரிபுபடுத்தி எழுதுவதோடு நின்றுவிடுவதில்லை. சில கொடிய துன்பியல் சம்பவங்களின் சுவடுகளை வரலாற்று புத்தகங்களில் இருந்து மறைத்தும் விடுகிறார்கள்.

நூற்றாண்டுகளாக சோடிக்கப்பட்ட வரலாற்றினால் தவறாகப் புரிந்து கொண்ட சமூகங்களில் ஆபிரிக்கர்களை பற்றிய கருத்து நிலை இன்னமும் மாறவில்லை. அவர்களைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொண்டோம், இன்று தொழிநுட்பம் இவ்வளவு தூரம் வளர்ந்த பின்னும் அவர்களை பற்றி நம் நினைவில் இருப்பது என்ன? அவர்களை பற்றிய அச்சமூட்டும் தோற்றங்கள், பின் தங்கிய காட்டுமிராண்டி வாழ்க்கை என்பனதானே இல்லையா? உலகின் அத்தனை வளங்களையும் கொண்டிருக்கும் ஆபிரிக்கா ஏன் வறுமையில் அல்லாடுகிறது என்பதன் காரணம் வெளிப்படையானது என்ற போதிலும் அது ஏன் சரிவர எழுதப்படவில்லை? அல்லது நமக்கு கற்பிக்கப்படவில்லை. ஆபிரிக்காவில் நடந்து கொண்டிருக்கும் சட்டவிரோத ஆயுதக்கடத்தல், போதைப்பொருள் கடத்தல், இவற்றின் தோற்றம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் காலனியவாதிகள் ஆபிரிக்காவை கண்டதில் வேர் கொண்டிருக்கிறது.

வெள்ளையின மேலாண்மை, காலனிய ஆதிக்கம் என்பனவற்றின் காலடியில் அவர்களின் வரலாறு திரிபுபடுத்தப்பட்டது. இந்தியா பிரித்தானியாவைப் போல வளர வேண்டும் என்றால் இந்த உலகத்தை போல இரண்டு உலகங்களை கொள்ளை அடிக்க வேண்டும் என்ற காந்தியின் வாசகங்களை புரிந்து கொள்வதன் மூலம் இன்று மேற்கத்திய நாடுகள் அனுபவிக்கும் செல்வ வளத்தின் பின்னே ஜீரணிக்க முடியாத கொடூர வரலாறு, அடிமை வியாபாரம், கொள்ளை, இனப்படுகொலைகள் என்பன ஒளிந்திருக்கின்றன என்பதை புரிந்து கொள்ள முடியும்.

அத்தகைய காலனிய ஆட்சியால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்று தான் கொங்கோ. ஏனைய ஆபிரிக்க நாடுகளை போலவே கொங்கோவும் அதன் கனிம வளங்களிற்காக சூறையாடப்பட்டது. அங்கே மிகப்பெரிய இனப்படுகொலை நிகழ்ந்துள்ளது. சுமார் பத்து மில்லியன் கொங்கோ மக்கள் கொல்லப்பட்டனர்.

கொங்கோ யுரேனியம், பித்தளை, தங்கம், தகரம், கோபால்ட், வைரங்கள், மாங்கனீஸ், துத்தநாகம் போன்ற தாதுப் பொருட்களை தாராளமாக கொண்டுள்ளது. நாட்டின் உயர் மட்டத்தில் உள்ள ஒருசில செல்வந்தர்கள் அவற்றின் மீதான ஏகபோகத்தை அனுபவிப்பதன் மூலம் தமது செல்வச்செழிப்பை பெருக்கி வருகின்றனர். அதே வேளை சுமார் எழுபது மில்லியன் மக்கள் தொகையை கொண்ட கொங்கோவின் கணிசமான மக்களும் பழங்குடியினரும் கடும் வறுமையால் துயருற்று வருகின்றனர். சராசரி ஆயுட்காலம் வெறும் 46 ஆண்டுகள்தான். சராசரியாக 1000 குழந்தைகள் பிறந்தால் அவற்றில் 114 குழந்தைகள் ஒரு வயதிற்கு முன்பாகவும் 195 குழந்தைகள் ஐந்து

வயதிற்கு முன்பாகவும் இறந்து விடுகிறார்கள். கொங்கோவின் இன்றைய மோசமான நிலை நீடிப்பதில் அமெரிக்காவினதும் பெல்ஜியத்தினதும் கரங்கள் உள்ளன.

**1884 இல் ஜெர்மனியின் பெர்லினில் ஆபிரிக்காவை பங்குபோடுவதற்கான மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. அதில் பெல்ஜியம், ஹங்கேரி, பிரான்ஸ், ஜேர்மன், ரஷ்யா, ஓட்டோமான் ராஜ்ஜியம், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் கலந்து கொண்டு ஆபிரிக்காவை துண்டுபோட்டன.**

ஆனாலும் நாம் அறியாத கொங்கோவின் காலனித்துவ கால வரலாறு ஒன்றுள்ளது. அது வரலாற்றில் இரண்டாவது லியோபோல்ட் என்று அழைக்கப்படும் அரசன் ஒருவனின் வரலாறு. அரசன் என்று அவன் அழைக்கப்படுகிற போதும் அவனது வரலாற்றை அவனால் உருவாக்கப்பட்ட கொங்கோவின் வரலாற்றை கேட்கும்போது ஹிட்லர், முசோலினி போன்றோரின் பெயரை கேட்பதைப்போல பய உணர்வு உங்களுக்குள் தோன்றுவதை தவிர்க்க முடியாது.


இரண்டாம் லியோ போல்ட் இன் கொங்கோ, உத்தியோக பூர்வ வரலாறாக அண்மைக்காலம் வரை எழுதப்பட்டிருக்கவில்லை. கொங்கோவில் லியோ போல்டினால் கூலிக்கு அமர்த்தப்பட்டிருந்த ராணுவத்தினரால் வீட்டுக்கு எழுதப்பட்ட கடிதங்களிலிருந்தும் நாட்குறிப்புகளிலிருந்தும் இருந்தே முதலில் லியோ போல்டின் கொடிய வரலாறு வெளிப்படுத்தப்பட்டது. ஆனாலும் லியோ போல்ட் இன்றும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பாடப்புத்தகங்களில் கொங்கோவின் முதலாவது அரசனாக வாழ்கிறான்.

1876 இல் பெல்ஜியத்தின் அரசனாக இருந்த இரண்டாம் லியோ போல்ட் சர்வதேச ஆபிரிக்கக் கழகம் (**African International Association**) என்கிற சர்வதேச தொண்டு நிறுவனத்தை ஸ்தாபித்தான். அதன் நோக்கமாக ஆபிரிக்கர்களை நாகரிகமயப்படுத்துவதை அறிவித்தபோதும் அதன் பின்னே ஆபிரிக்காவைச் சுரண்டும் கள்ள நோக்கை கொண்டிருந்தான். இந்த அமைப்பை பயன்படுத்தி கொங்கோவில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தினான். ஆபிரிக்காவின் கனிம வளங்களை கொள்ளை அடிப்பதோடு நின்று விடாமல். அன்று காலனித்துவ காலத்தில் பெரும் லாபம் ஈட்டித்தந்த ரப்பர் ஏற்றுமதியிலும் கவனம் செலுத்தினான்.

1884 இல் ஜெர்மனியின் பெர்லினில் ஆபிரிக்காவை பங்குபோடுவதற்கான மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. அதில் பெல்ஜியம், ஹங்கேரி, பிரான்ஸ், ஜேர்மன், ரஷ்யா, ஓட்டோமான் ராஜ்ஜியம், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் கலந்து கொண்டு ஆபிரிக்காவை துண்டுபோட்டன. அதன் மூலம் லியோ போல்ட் கொங்கோவை தனது சொந்த அடிமைகள் தொழுவமாக்கி அடிமைகள் வியாபாரத்தை மேற்கொண்டான். அது அவனுக்கே சொந்தமான தனிப்பட்ட பண்ணை. அவனுக்கு என்றே ஒரு ராணுவப்படை கொண்டு அந்த அடிமைகள் தொழுவத்தை கட்டிக்காத்து வந்தான். அடிமை வியாபாரத்தில் அனுகூலம் கண்ட மேற்கு நாடுகள் அங்கு நடந்த கொடுமைகளை கண்டும் காணாமலும் விட்டன. அவன் தனது அடிமை வியாபாரத்தை ஆபிரிக்க வர்த்தக சம்மேளனத்தின் கீழே சட்ட ரீதியாக நடத்தி வந்தான்.

மறுபுறமாக அவன் நடத்தி வந்த ரப்பர் தோட்டத்தில் விசித்திரமான கொடூர நடைமுறை ஒன்றைக்கொண்டிருந்தான். தோட்டத்தில் இருக்கும் தொழிலாளர்கள் தினமும் குறித்தளவு பால் எடுக்க வேண்டும் தவறுபவர்கள் கொலை செய்யப்படவேண்டும். அதற்கு ஆதாரமாக கொலை செய்யப்பட்டவர்களின் வெட்டப்பட்ட கரங்களைக் காண்பிக்க வேண்டும். வீரர்கள் தோட்டாக்களை வீணாக்காமல் இருக்க இந்த ஏற்பாடு. ஆனால் போர்வீரர்கள் தங்கள் குண்டுகளை குரங்குகளில் வீணாக்கிவிட்டு பதிலாக ஆட்களின் கரங்களை வெட்டிக்கொண்டு போய் கொடுப்பார்கள். குறைவாக பால் சேகரித்த மக்கள் குழுக்கள் கைகளுக்காக அயற்கிராமங்களுடன் மோதும் துயரமும் நிகழ்வதுண்டு. லியோ போல்ட் ஆட்சியின் கீழ் கொங்கோவின் சனத்தொகை பத்து மில்லியனால் குறைந்தது. லியோ போல்டின் இறப்பர் தோட்டங்களிலிருந்த மரங்களில் வழிந்த ரப்பர் பாலில் ஆயிரக்கணக்கான கொங்கோ வாசிகளின் அறுபட்ட கரங்களிலிருந்து வழிந்த ரத்தம் கலந்திருந்தது.

நாம் வரலாற்றில் திரும்ப திரும்ப நினைவு கூறும் கொடிய சர்வாதிகாரிகளின் வரிசையில் லியோ போல்டின் பெயர் இல்லை. நீண்ட காலனிய வெள்ளையினவாத வரலாற்றில் இருக்கும் அவனது பெயர் இன்றுவரை நாம் படிக்கும் உலகவரலாற்றில் இடம்பெறாமல் இருப்பதன் காரணம் தான் இக்கட்டுரையின் முன்னிரண்டு பந்திகளில் சொல்லப்பட்டுள்ளது.



# காலம்தோறும் பெண்கள்

-ப்ரியா ராமநாதன்

> "ஆடை அணிகலன், ஆசைக்கு வாசமலர் தேடுவதும்,
> ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும்
> அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப்போல் வாழுவதும்
> கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர்குலம்
> மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர்பகுதி..."

புரட்சிக்கவி பாரதிதாசனின் இக்கவிவரிகளைச் செவிமடுக்கையில், காலங்காலமாக பெண்களாகிய நாங்கள் படுக்கையறைப் பாவையாய், பிள்ளை பெறும் இயந்திரமாய், அப்பிள்ளைகளை பேணிவளர்க்கும் தாதியாய், குடும்பத்திற்கே சமைத்துப்போடும் வேலைக்காரியாய், கணவனின் அதிகார அழைப்பிற்கு எடுபிடியாய் மொத்தத்தில் எமக்கென்று ஓர் தனித்த இயல்பும், உணர்ச்சியும் இல்லாத ஜடமாகத்தான் இருந்துவருகின்றோமா என எண்ணத்தோன்றுகிறது .

என்னதான் ஆணும் பெண்ணும் சமமென்று கூறப்பட்டாலும், பிறப்பின் அடிப்படையிலேயே, ஆண் குழந்தைகள் பயமற்றவர்களாகவும், வீரம் மிக்கவர்களாகவும், தன்னம்பிக்கையுடையவர்களாகவும், சுயமாக இயங்கக்கூடியவர்களாகவும், வளர்க்கப்படும் அதேவேளையில், பெண்குழந்தைகளாகிய நாங்கள் பயந்தவர்களாகவும், மற்றவர்களை சார்ந்து நிற்க்க வேண்டியவர்களாகவும், எமது உணர்ச்சி வெளிப்பாட்டை கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாகவும் வளர்க்கப்படுகிறோம். காலந்தோறும் பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற பண்புகள் சிறுகச் சிறுக ஏற்றப்பட்டு ஓர் குறிப்பிட்ட வரையறைக்குள் வளர்க்கப்பட்டவளாகத்தான் இருப்பாள். அவ்வரையறைகளை மீறுவதட்கும் அப்படியே மீறி வந்தால் ஏற்றுக்கொள்வதற்கும் இந்தச் சமூகம் இடம் தராது. ஏனெனில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உலகின் அனைத்து மதங்களுமே சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் என்று பெண்கள் விடயங்களில் இறுக்கமான முடிவுகளை எடுத்துவிட்டன. ஆண் சம்பந்தப்பட்ட விழுமியங்களில், பழக்க வழக்கங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றங்கள், பெண்கள் விடயத்தில் மட்டும் இறுகிப்போய் பாராபட்சம் காட்டுகின்றன.

அமைதி, உழைப்பு, பணிவு, நன்னடத்தை, தன் முனைப்பற்ற தன்மை போன்றவற்றை கொண்டவர்களாக பெண்கள் இருக்கவேண்டும் என்பதே சமூக எதிர்பார்ப்பு. உண்மையிலேயே பெண்கள் பயந்த, உடல் மற்றும் மனோ பலம் அற்றவள்தானா? ஒரு கருவைத்தாங்கி, அதற்கு உயிரையும் ஊட்டத்தையும் அளித்துப் பேணி, மண்ணில் பிறப்பளிக்கக்கூடிய ஒரு பெண்ணை பலம் இல்லாதவளாகவா இயற்கை படைத்திருக்கக்கூடும்? குருதி கண்டஞ்சும் கோழைகளா பெண்கள்? ஆணை விட பெண்ணையே இயற்கை உறுதியுள்ளவளாகப் படைத்திருக்கிறது. எனினும் காலப்போக்கில் பெண் என்றால் மென்மை மட்டுமே என்றதோர் பொய்யான பிம்பம் ஆணினால் உருவாக்கப்பட்டு அவர்களது தேவைக்கேற்ப மாற்றப்பட்டுவிட்டதென்பதே உண்மை.

அபலையாக இருப்பதே பெண்ணுக்கழகு, அழகின் இலக்கணமே அச்சம் பேதைமை மடமை ஆகியனவன்றோ? விரோதிகள் எவரேனும் இருக்கிறார்களா? என்று கானகத்து மரங்களினூடே எட்டிப் எட்டிப்பார்த்துக்கொண்டே வரும் மான்களின் விழிகள் எவ்வளவு அழகானவை? அதைச் சிறப்பாக்கி எங்களுக்கு "மான் விழியாள்" என்று பட்டம் சூட்டப்பட்டது. மானைப்போன்ற அழகிய கண்கள் என்று மகிழ்ந்துபோன நாங்கள்,

அந்த அழகு, மருண்ட அச்சம் மிகுந்த திகிலிலே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைக்கூட உணரவில்லை.

"பொம்பிளை சிரிச்சாப் போச்சு, புகையிலை விரிஞ்சாப் போச்சு" என்ற ஒரு வார்த்தையிலேயே இனம் புரியாத அச்சத்தையும், குற்ற உணர்வினையும் பெண்களின் மனதில் உருவாக்கி, அவர்களது உணர்வுகளின் இயல்பான வெளிப்பாட்டிற்கே தடைபோட்டு, அவளைத் தன்னுள்ளே ஒடுங்கிப் போகச் செய்யும் சமூகம், கல்வித்துறையில் முற்றுமுழுதாக எங்களுக்கான சந்தர்ப்பங்களை மறுக்கவில்லையாயினும், "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்ற மனோபாவம் இன்னுமே இருக்கத்தான் செய்கிறது. இவ்வாறு முளையிலேயே எங்கள் அறிவுக்குத் தடைபோடும் அதே சமூகம், "பெண் புத்தி பின் புத்தி, பெண்களின் அறிவு அகப்பைக் காம்பளவே" என்றும் ஏளனம் செய்யத் தவறுவதில்லை.

ஒருவேளை இவ்வாறான பழமொழிகள் அறிவாற்றலில் குறைந்த பெண்களைக் குறிப்பிட்டாலும் கூட, யதார்த்தத்தில் அறிவிலும் ஆற்றலிலும் தீர்க்கமான பெண்களை சமூகம் அவ்வளவு சீக்கிரத்தில் அங்கீகரித்துக் கொள்வதுமில்லை. சமூகப்பார்வையில் ஓர் ஆணின் அறிவு "அதிகாரம்" பெண்ணின் அறிவு "அகங்காரம்" என்ற கண்ணோட்டமே இன்றுவரை இருந்துவருகிறது. ஆண்களுக்கு வாய்த்ததுபோல் பல்வேறு பணிகளை மேற்கொள்ள வாய்ப்பு நேராததாலும், குடும்பக் கூட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பதாலும் பெரும்பாலும் எங்களது மனம் விரிவடைய வாய்ப்பின்றிப்போகிறது என்பதே மறுக்கவியலாத உண்மை. அதனால்தானோ என்னவோ இன்னுமே நாங்கள் தொலைகாட்சித் தொடர்கள் பற்றியும், ஆடை அணிகலன் பற்றியும், சமையல் பற்றியுமே பேசிக்கொண்டிருக்கிறோம். வாசிப்பு என்றாலும் இல்லற இயல்புகளைக் கூறும் நாவல்களையும், சமையல் குறிப்புக்கள் அடங்கிய சஞ்சிகைகளையும் தேடிப்பிடித்து வாசித்துக்கொண்டிருக்கிறோம். ஏனெனில், காலங்காலமாக நாங்கள் "திருமணம்" என்ற ஒன்றிற்காகத்தானே பேணி வளர்க்கப்படுகிறோம்.

ஆணுக்குச் சரிநிகரான உழைப்பினை மேற்கொள்ளும் இன்றைய சூழ்நிலையிலும்கூட, எங்களது உழைப்பு இரண்டாம்தரமான அல்லது துணை உழைப்பாகவே நோக்கப்படுகிறது. பெண்ணினது உழைப்பின் பயன்பாடு குறைவானது என்ற மனோபாவம் மட்டுமன்று , இவள் மென்மையானவள் என்ற சப்பைக்கட்டில் பொருளாதாரத்தில் கூட பெண்ணுக்கு குறைந்த கூலியே. அதுமட்டுமன்றி வீட்டிலிருக்கும் பெண்களது உழைப்புக்கூட "குடும்பப் பொறுப்பு" என்ற பெயரில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிடுகின்றது. வெளியே வேலைக்குச் செல்லும் பெண்ணானாலும் வீட்டு வேலைகள் அனைத்தையும் அவள் செய்துமுடித்துவிட வேண்டும். ஏனெனில், அதுதான் ஓர் சிறந்த பெண்ணுக்கு அழகென்கிறது "இரட்டைச் சுமையினையும்" சுமக்கவைக்கும் இந்த சமூகம்.


"கெண்டைக்கால் சிறுத்தவளும், கொண்டை பெருத்தவளும் கொண்டவனுக்கு ஆகாது" என்று பெண்ணின் அங்க அமைப்பைக்கொண்டு அவளது குணாதிசயங்களை நிர்ணயிக்க முயலும் சிறுமை கொண்ட இந்த நவீன சமூகத்தில் கணவனை இழந்த ஓர் பெண்ணுக்கு மொட்டையடித்து வெள்ளை சுற்றி மூலையில் அமர வைக்கவில்லையாயினும் அவளுக்கு மங்கள காரியங்களில் இன்றுவரை இடமில்லை என்பதே உண்மை.

பாலியல் வன்புணர்வுகளின் போது கூட ஓர் ஆணின் செயற்பாட்டுக்கு பெண்ணையே குற்றவாளியாக்குகிறது இந்தச் சமூகம். ஏனெனில் ஓர் பெண் சரியாய் இருந்தால் இந்த சமூகத்தில்

**எமது கலாசாரத்திலும் சூழலிலும் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் பெண்களால் எளிதாகப் புரிந்து கொள்ளத் தக்கதாக இருப்பதில்லை. அவை நுண்ணிய வையாகவும் நிலைபெற்றவையாகவும் இருக்கின்றன.**

குற்றங்கள் குறைந்துவிடும் என்ற அபத்த எண்ணம் கொண்ட சமூகத்தில் பெண் மட்டுமே இழுத்துப் போர்த்தப்பட்டு மீண்டும் வீட்டுக்குள் முடக்கப்படுகிறாள். குற்றமிழைக்கும் ஆணுக்கு எந்த தனிமனித ஒழுக்கமும் தேவையில்லை போலும். ஒருவேளை இந்தச் சமூகம் எங்களுக்கு ஒழுக்கத்தினை போதிக்க எடுத்துக்கொண்ட முயற்சியை எங்களுக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதில் மேற்கொண்டிருந்தால், எங்களை நாங்களே காப்பாற்றிக் கொண்டிருப்போமோ என்னவோ.

எமது கலாசாரத்திலும் சூழலிலும் பெண்கள்மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் பெண்களால் எளிதாகப் புரிந்துகொள்ளத் தக்கதாக இருப்பதில்லை. அவை நுண்ணியவையாகவும் நிலைபெற்றவையாகவும் இருக்கின்றன. பெண் மீதான ஒடுக்குமுறைகள் எவை, அவை எப்படி எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது என்பதைப் பிரித்தறியும் அறிவு பெண்கள் மத்தியில் வளர்த்தெடுக்கப்படவேண்டும், ஒடுக்குமுறைகளுக் கெதிராகக் குரல்கொடுக்கும் ஆற்றலையும் அக்கறையையும் ஏற்படுத்தவேண்டும். இவையே இவ்வொடுக்குமுறைகளிலிருந்து விடுதலையடைவதற்கான முதற்படி



# இயற்கைக்காய் ஒலித்த குரல்

-க. ராம்

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் கடந்த டிசம்பர் 30 அன்று காலமானார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக இயற்கைக்காக முழங்கிய குரல் ஒலிப்பதை நிறுத்திக்கொண்டது. ஒற்றை மனிதனாகத் தொடங்கிய அவரது பயணம், இன்று பலரை இயற்கை வேளாண்மையின் பக்கம் திருப்பியிருக்கிறது. அந்த ஒற்றைக் குரல் ஆயிரம் புதிய குரல்களை தட்டி எழுப்பிவிட்டுத்தான் அமைதியடைந்திருக்கிறது.

தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்தில் பிறந்த நம்மாழ்வார், அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் வேளாண்மை இளங்கலைப் பட்டம் பெற்று, அரச விவசாய ஆய்வு நிறுவனமொன்றிலே பணியாற்றினார். இந்தியாவின் விவசாயத்தைப் பசுமைப் புரட்சி என்ற பெயரால் நாசமாக்கும் அரசின் நடவடிக்கைகளைக் கண்டு அதிருப்தியுற்று, இயற்கைவழி வேளாண்மை குறித்த விழிப்புணர்வைப் பரப்பும் பணியை முன்னெடுத்தார். பசுமைப் புரட்சியின் போது இரசாயன உரங்கள் ஊக்குவிக்கப்பட்டது. அவ்வேளை, கிராமந்தோறும் விவசாயிகளை நேரில் சந்தித்து அதன் பாதிப்புகளை அறிவியல்ரீதியாக உணர்த்தி, இயற்கை வேளாண்மை குறித்து விளக்கவேண்டிய அவசியத்தை எல்லோருக்கும் உணர்த்தினார்.

இயற்கை வேளாண் அறிஞர்களின் மூலம் அறிந்த தொழில்நுட்பத்தையும், தனது அனுபவ அறிவினால் உணர்ந்ததையும் சராசரி விவசாயிகள் புரிந்து கொள்ளும் மொழியில் விளக்கினார். வெள்ளைத்தாடியுடன் துண்டு போர்த்திய வெற்றுடம்புடன் எளிமையாகத் திரிந்த அவர் ஒரு சராசரி விவசாயின் அடையாளமாகத் திகழ்ந்தார்.


"உழவுக்கும் உண்டு வரலாறு", "தாய்மண்ணே வணக்கம்", "பூமித்தாயே", "எந்நாடுடைய இயற்கையே போற்றி", "இனி விதைகளே பேராயுதம்", "வயிற்றுக்குச் சோறிட வேண்டும்", "நோயினைக் கொண்டாடுவோம்" எனப் பல நூல்களை எழுதியும் உள்ளார். பெரு நிறுவனங்களின் இலாப நோக்கிற்காக பல வழிகளிலும் இயற்கை அழிக்கப்படுவதை அடையாளங்கண்டு இயற்கை சார்ந்த எல்லாப் பிரச்சினைகளுக்காகவும் போரா டுவதை தன் முதற் கடமையாய் எண்ணி வாழ்ந்தார்.

பெரு நிறுவனங்களின் இலாப வேட்டையில் சிக்கி அழிந்துகொண்டிருக்கும் இயற்கையைப் பாதுகாக்க நினைக்கும் அனைவரும் இயற்கை விவசாயம் பற்றி அறிந்திருக்க வேண்டும். உலகளாவிய ரீதியில் அதிக இரசாயன உரப் பாவனையாலும் பூச்சி கொல்லிகளின் பாவனையாலும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுகின்றன. விவசாய நிலங்கள் விவசாயத்துக்கே பயன்படாத நிலையும் இன்னும் சில நாளில் வந்துவிடும்.

இப்படி இயற்கைக்கு எதிரான போர் நடந்துகொண்டிருக்கும்போது சகல அரசுகளும் இந்தப் பன்னாட்டு நிறுவனங்களின் இலாபத்துக்காக விவசாயிகளுக்கு செயற்கை உரங்களுக்கான மானியங்களை வழங்குவதும் அவற்றைப் பயன்படுத்தத் தேவையான அறிவூட்டலை வழங்குவதுமாக இருக்கின்றன. இரசாயன உரத்துக்கு மாற்றாக, பயிர் சுழற்சி வேளாண்மை முறையினையோ அல்லது வேறு இயற்கையைப் பாதிக்காத முறைகளையோ அரசுகள் விவசாயிகள் மத்தியில் முன்வைப்பதில்லை. இந்த நிலையில் இயற்கையின் மீது அன்புகொண்ட நல்ல உள்ளங்கள் மக்களை விழிப்படையச் செய்வதற்கு முன்வரவேண்டும். விவசாயிகளையும் பொது மக்களையும் அறிவியல் ரீதியாக தெளிவுபடுத்திப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். இப்படிச் சிந்திப்பவர்களுக்கு நம்மாழ்வார் ஒரு முன்மாதிரி.

# பேண்தகு கணிமை வரமா சாபமா?

-பித்தன்



சூழல் பாதுகாப்புத் தொடர்பான அக்கறை உலக ளாவிய கவனத்தை ஈர்த்ததன் பிற்பாடு சூழல் பாதுகாப்பு என்பது மாபெரும் வணிக, அரசியல் பேசுபொருளாக மாறியுள்ளது. "பசுமை" என்ற முன்னொட்டுக்கொண்ட ஏராளமான கோட்பாடுகள் நாள்தோறும் உருவாகின்றன. அவற்றுள் ஒன்றுதான் பசுமைக்கணிமை அல்லது பேண்தகு கணிமை (Green IT)என்கிற எண்ணக்கருவாகும்.

பேண்தகு கணிமை என்பது கணினி சார் தொழிநுட்பங்களை இயற்கையைப் பாதிக்காமலும் நீடித்து நிலைக்கக்கூடியவாறும் பயன்படுத்துவதற்கான நடைமுறை. சற்று விளாக்கமாகச் சொல்லப்போனால், ஒரு தொழிநுட்பத்தை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், பயன்படுத்துதல், மீள்சுழற்சிக்கு உட்படுத்துதல் அல்லது அப்புறப்படுத்துதல் என எல்லாக் கட்டங்களிலும் அவை இயற்கையைப் பாதிக்காமல் இருப்பதை உறுதிசெய்வதற்கான நடைமுறையும் கல்வியுமே இந்தப் பேண்தகு கணிமை ஆகும். உற்பத்தி நடவடிக்கைகளின் போது அபாயகரமான மூலப்பொருகளைப் பயன்படுத்துவதைக் குறைத்தல், பாவனைக் காலத்தின் போது சக்திச் சிக்கனத்தை உறுதிப்படுத்தல், மீள்சுழற்சியை ஊக்கப்படுத்தல், இலத்திரனியல் கழிவுகளால் ஏற்படும் ஆபத்துக் களைக் கட்டுப்படுத்தல், எதிர்காலத்தில் இலத்திர னியல் கழிவுகளின் அளவைக் குறைத்தல் என்பன இதன் இலக்குகளில் சிலவாகும்.


இப்படி "பசுமை" என்ற முன்னொட்டைத் தாங்கிவரும் ஒவ்வொரு கோட்பாடும் தனக்கே உரித்தான வேறுபட்ட வரைவிலக்கணத்தையும் இலக்குகளையும் கொண்டுள்ளபோதும் அவை எல்லாவற்றுக்கும் பொதுவான நோக்கம் ஒன்று உள்ளது. இயற்கையைப் பாதுகாப்பதுதான் அந்த நோக்கம் என்று நாங்கள் கருதலாம். ஆனால் அது உண்மையன்று. இவையனைத்தும் இயற்கையைப் பாதுகாப்பதற்கானவை என்ற எங்கள் நம்பிக்கையை மூலதனமாக்கி பெரும் இலாபம் சம்பாதிப்பதே இதன் உண்மையான நோக்கமாகும்.

இப்படியான ஒரு கோட்பாட்டின் மூலம் எப்படிப் பணம் சம்பாதிக்கலாம் என்பது ஒரு கேள்வியாய் எழலாம். ஒரு தொழிநுட்பம் மேற்சொன்ன கோட்பாட்டின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நாம் எவ்வாறு உறுதி செய்து கொள்கிறோம் என்பதில்தான் இந்தக் கேள்விக்கான பதில் இருக்கிறது. அந்தப் பொருட்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களைப் பார்த்தோ அல்லது தயாரிப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களைப் பார்த்தோதான் நாம் அதை உறுதி செய்து கொள்கிறோம். இந்த சான்றிதழ்களில் புதிது புதிதாய் விடயங்கள் சேரச் சேர அப்பொருட்களின் விலை அதிகரிக்கும். ஆனால் உண்மையில் கோட்பாடுகள் சொல்வதைச் சற்றும் பின்பற்றாத நிறுவனங்கள்கூட இன்று தங்கள் சான்றிதழ்களுடன் பசுமைச் சான்றிதழையும் இணைத்து பொருட்களின் விலையை உயர்த்தி இலாபம் பார்க்கின்றன. இச்சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்கள்கூட இலாப நோக்கில்தான் இயங்குகின்றன.

கோட்பாட்டில் தவறில்லை அதை சரியாய் நடைமுறைப்படுத்தாமையே பிரச்சினை என நாம் எண்ணலாம். ஆனால் இக்கோட்பாடுகள் எல்லாமே அமுல்படுத்துவதற்காக உருவாக்கப்படவில்லையே. வெறும் இலாபத்துக்காகத்தானே உருவாக்கப் பட்டவை. அப்படியிருக்கும் போது இயற்கையைப் பற்றி அது எங்கே கவலைப்படப் போகிறது?

# நிலத்துக்கான அடையாளமும் அடையாளமாய் நிலமும்

-யாதவன்




(அடையாளமற்றிருத்தல், சம்பூர் வதனரூபன், வடலி வெளியீடு, 2013 ஒக்டோபர், 96 பக்கங்கள், விலை: இந்திய ரூபாய் 70)

முப்பது ஆண்டுகால கொடிய யுத்தமும் அதன் கோர முடிவும் தமிழ் மக்களிடமிருந்து அனைத்தையும் பறித்து விட்டு அவர்களை நடுத்தெருவில் விட்டிருக்கிறது. விடுதலைக்கான போராட்டம் இன்று அன்றாட இருப்புக்கான நித்திய போராட்டமாய் மாறியிருக்கின்ற சூழலில் நிலம் பிரிந்தவனின் துயரை அவலத்தை கவிதைகளாகத் தாங்கி வெளிவந்திருக்கும் "அடையாளமற்றிருத்தல்" கவிதைத் தொகுதி கவனிப்புக்குரியது. தனது ஊரின் பெயரையே தனது பெயரில் வைத்திருக்கும் சம்பூர் வதனரூபன் அவரது பெயரினூடாகவேனும் தனது ஊரை வாழ வைக்க முயல்கிறார். அவரது அச்சம் நியாயமானதாகவே தோன்றுகிறது. காலப்போக்கில் அது வேறு பெயரில் அழைக்கப்பட சம்பூர் என்ற பெயரே வரலாற்றால் அழிக்கப்படும். இது இலங்கை வரலாற்றில் நிறையவே நடந்திருக்கிறது.

சம்பூர் தமிழ் மக்களின் வாழ்வியலின் தமிழ்த் தேசிய அரசியலின் முக்கிய குறியீடு. இன்று சம்பூர் பிரதேசத்தை மீட்பது பற்றி யார் பேசுகிறார்கள். இடம்பெயர்ந்த சம்பூர் மக்களின் எதிர்காலம் குறித்து கவலைப்பட யாராவது இருக்கிறார்களா. இவை பதில்களை வேண்டி நிற்கும் கேள்விகள்.

இக்கேள்விகளுடன் கவிதைகளுக்குள் சென்றால் அவை போரையும் போரைத்தொடர்ந்த அவலத்தையும் கவித்துவமாக பதிவுசெய்துள்ளன தமிழ்ச் சமூகத்தின் மனோநிலையை பிரதிபலிக்கும் கவிதைகள் முக்கியமானவை. தேர்தல் பற்றித் தெளிதல் என்ற கவிதையில்

**மக்கள் தெளிவாயுள்ளார்கள் போலும்..**
**அவர்கள் நினைக்கிறார்கள்**
**வாக்கெடுப்புக்களே அனாவசியமானது**
**வாக்களித்தல் நேர மெனக்கேடு..**
**தாங்கள் ஓட்டு போடாவிட்டாலும்**
**தங்களுக்கான பிரதிநிதிகள் தெரிவாவார்கள்**
**அல்லது தெரிவாக்குவார்கள் என்று**

என்ற வரிகள் தேர்தல் ஜனநாயகம் பற்றிய விமர்சனமாக விரிகிறது. தேர்தல்கள் எதையும் சாதித்துவிடப் போவதில்லை என்பதன் வெளிப்பாடாக அமையும் வரிகளின் அடுத்த வரிகள் தங்களால் தெரியப்படும் பிரதிநிதிகள் மீதான எள்ளல் தொனியிலமைந்த குறிப்பாக அமைகிறது.

**எல்லாத்தமிழனுக்கும் கிடைக்காத வசதியும்**
**சுதந்திரமும்**
**சிலருக்காவது வாய்க்கிறதே போகட்டும்.**
**மற்றவருக்காக ஏதும் செய்யாவிட்டாலும்**
**அவர்களுக்காகவாவது ஏதும் சேகரிக்கட்டும்.**

சம்பூர் மக்களின் மனநிலையை அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பது பற்றிய நேர்மையான பதிவாக இதைக் கொள்ளலாம். இன்றும் தங்கள் சொந்த நிலங்களில் இருந்து பிரிக்கப்பட்ட அந்த எளிமையான மக்கள்

அகதிமுகாம்களில் வாழ்கிறார்கள். பிரதிநிதிகள் சகல வசதிகளோடும் தமிழ் மக்களை வைத்து தங்கள் சுயலாபங்களுக்காக சதுரங்கம் ஆடுகிறார்கள். அந்தக் கவிதை இவ்வாறு முடிகிறது.

**இன்னுமொன்று..**
**பூனைகள் வளர்க்கிறோம்**
**அவை எலியை பிடிக்காவிட்டாலும்**
**பண்டங்கள் நடுவே கத்தி திரிந்தாலே போதும்**
**எலிகள் பண்டங்கள் பக்கம் வர தயங்கும்.**
**– அதுபோல**
**நாம் பூனையொன்று வளர்ப்பதற்காவது**
**முன்வருவோம்.**
**கடிக்கும் பூனை இல்லாவிட்டாலும்**
**கத்தி திரியும் ஒன்றையாவது.**

தமிழ் மக்களின் அரசியல் வங்குரோத்து நிலையை தார்மீகக் கோபத்துடன் சம்பூர் வதனரூபன் எடுத்துக் காட்டுகிறார். கடந்த அக்டோபர் மாதம் எட்டு வருடங்களின் பின் இலங்கை மின்சார சபைக்கும், இந்திய தேசிய அனல் மின்சாரக் கம்பனிக்குமிடையே சம்பூரில் ஓர் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானது. தமிழர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லித்திரியும் யாரும் வாய்திறக்கவில்லை. அதனால் தானோ என்னவோ கடிக்க இயலாத பூனையாக இல்லாவிட்டாலும் கத்தி திரியக்கூடிய பூனையையாவது தமிழ் மக்கள் தெரிய வேண்டும் என்று கவிஞர் வேண்டுகிறார் போலும்.

இத்தொகுதியில் இருக்கும் இன்னொரு கவிதை என் கவனத்தை ஈர்த்தது. அக்கவிதையின் இடையில் சில வரிகள் இவ்வாறு வருகின்றன.

**கோபியர்களிடம் திருடிய சேலைகளை**
**–சேர்த்துவைத்து**
**கண்ணர்கள்**
**திரௌபதைகளைக் காத்தனர்.**

**பாரதர்கள் பகடைகளை எறிந்து**
**பண்டை நிலங்களை**
**சகுனிகளிடம் விட்டுப் போயினர்.**

இவ்வரிகள் சில கேள்விகளை என்னுள் எழுப்பியது. இக்கேள்விகள் எக்காலத்துக்கும் பொருத்தமானவை. பகடைகளைக் கையிலேந்தியது யார் குற்றம். சகுனியின் குற்றமன்று. பாரதப்போரின் நிறை வில் சொந்தப் பிள்ளைகளையே பறிகொடுத்துவிட்டு பிணக்குவியலின் மேலேயே பாண்டவர்கள் அரசாசனம் ஏறினர். பாண்டவர்கள் உத்தமர்கள் அன்று. இரத்தக்கறை அவர்கள் கைகளிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

திரௌபதையின் சேலையை உருவியது எவ்வளவு பெரிய அநீதியோ அவ்வளவு பெரிய அநீதி கோபியர்களின் சேலைகளை திருடியது. தமிழ்ச் சமூகம் தங்களை கண்ணாடிமுன் நின்று சுயவிமர்சனம் செய்தாக வேண்டும். அதுவே தமிழ்ச் சமூகம் முற்போக்கான திசைவழியில் முன் செல்ல வழி செய்யும்.

நிலத்தைப் பிரிந்தவனின் துயரமாக, சம்பூர் மக்களின் தனித்த குரலாக இந்த கவிதைத் தொகுதியைப் பார்க்க முடியும். கவிதைகளை கால வரையறையில் ஒழுங்குபடுத்தியிருந்தால் புதிய வாசகனுக்கு வரலாற்றை வரன்முறையாகப் புரிந்து கொள்ளக்கூடியதாய் இருந்திருக்கும். இன்னும் கொஞ்சக் காலஞ் சென்றால் புதிய வரலாறுகள் எழுதப்படுவது தவிர்க்கவியலாதது. எனவே போராட்டத்தின் கருவியாக கவிதைகளும் இலக்கியங்களுமே இருக்க முடியும். அவையும் ஆபத்தானவை என்று தடை செய்யப்படும் மட்டும். இவ்வாறான தொகுதிகளின் வருகை முக்கியமானது. இன்று தமிழ் சமூகம் தனது இருப்புக்காக போராட வேண்டிய நிலையில் இருக்கிறது. இது பதிவுகள் அழியும் காலம். நடந்தவை எல்லாம் ஏதோவொரு வழியில் பதிவாக்கப்படுதல் அவசியம். அவ்வகையில் ஒரு சமூகத்தின் நம்பிக்கையை தவிர்க்கவியலாமல் தன் தோள்களில் சுமக்கும் சம்பூர் வதனரூபன் தொடர்ந்தும் சமூகப் பயனுள்ள விடயங்களை எழுதுவது அவசியம்.

பயங்கரவாதத்தை தோற்கடித்தல் என்ற பெயரில் நடக்கும் விடயங்கள் எவ்வாறு சாதாரண மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்றன என்பதையும் விடுதலையின் பெயரால் அனுமதிக்கப்பட்டவற்றுக்கு மக்கள் இறுதியில் கொடுத்த விலை பெரியது என்பதையும் இக்கவிதைத்தொகுதி கோடிட்டுச் செல்கிறது. இக்கவிதைகளில் இழையோடும் இன்னொரு பார்வை தமிழ்ச் சமூகத்தை உலகத்தில் ஒடுக்கப்படுகின்ற மற்றைய சமூகங்களான பலஸ்தீன மற்றும் குர்திஷ் சமூகங்களோடு ஒப்பு நோக்குவதாகும். இன்று தமிழ் மக்கள் தங்களை ஏனைய ஒடுக்கப்படும் விடுதலைக்குப் போராடும் சமூகங்களோடு இணைத்துப் பார்க்க வேண்டும்.

அடையாளமற்றிருத்தல் தொகுதி அடையாளந் தொலைத்த மக்களின் கதையை கவிதைகளினூடாகச் சொல்கிறது. எங்கள் கைகளில் எஞ்சியருப்பது நம்பிக்கைகள் மட்டுமே. இக்கவிதைத் தொகுதியில் சொல்லப்பட்டிருப்பது போல:

**தோற்றுப் போனவர்களில்லை**
**நாங்கள்**
**வென்றவர்கள் மத்தியில் இருக்கும்**
**இன்னும் வெல்லாதவர்கள்**

**விமர்சனம்**

# நிமிர்ந்து நில்

## இது இன்னொரு சங்கர் படம்



ஊழல் நிறைந்த இந்தியா, பாதிக்கப்படும் நேர்மையான இளைஞன், ஊழலுக்கெதிரான அவனது போராட்டம், இறுதியில் வளமான சமூகம் தோன்றுதல். சுருக்கமாக சொல்லப்போனால் இதுதான் படத்தின் கதை. ஒரே ஒரு கதையை வைத்து காலம் தள்ளிக்கொண்டிருக்கும் சங்கரின் படம் போல சில வேளை உங்களுக்கு தோன்றலாம். அப்படித் தோன்றினால் தவறொன்றும் இல்லை. பிரமாண்டமான செலவில் ஐந்து பாடல்களை படம்பிடித்து இன்னும் இரண்டு சண்டைக் காட்சிகளையும் சேர்த்திருந்தால் நூறு சதவீதம் சங்கர் படம்தான்.

சட்டதிட்டங்களை அவ்வப்போது மீறி தேவைப்படும் போது லஞ்சம் கொடுத்து, வாழ்வதற்காக வளைந்து கொடுத்துப் போவதுதான் யதார்த்த வாழ்க்கை என சொல்லும்போது, என்னை விபச்சாரம் பண்ணச் சொல்லுறீங்களா? எனக் கேட்கும் பாத்திரமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறார் கதையின் நாயகன். செய்யாத குற்றங்களுக்காக, நேர்மையற்ற அதிகாரிகளால் தண்டிக்கப்படுகிறார். அதற்கெதிராக நீதிவேண்டி மேலிடங்களுக்கு மனு அனுப்பி அதற்காக மீண்டும் தாக்கப்பட்டு, ஊழலுக்கு எதிராக போராட தொடங்குகிறார். இந்தப் போராட்டத்தில் எப்படி வெற்றி பெறுகிறார் என்பதுதான் கதை.

சராசரி வேகத்தில் நகர்கிறது திரைக்கதை. பெரிதாக சொல்லிக்கொள்ளும் அளவுக்கு எந்தத் தொழில்நுட்பமும் படத்தில் விஞ்சி நிற்கவில்லை. அதேவேளை குறை சொல்லுமாற்போல் மோசமாகவும் அவையில்லை. தொழில்நுட்பக் கலைஞர்கள் தமது வேலையை சரியான முறையில் செய்துள்ளனர். பெரும்பாலான இடங்களில் படத்திற்கு இயக்குனர் சமுத்திரக்கனியின் வசனங்கள் பக்கபலமாக இருக்கிறது. பல இடங்களில் காட்சிகளை பூரணப்படுத்துவதும் வசனங்களே. சில காட்சிகள் படத்தில் வலிந்து புகுத்தப்பட்டவையாக தெரிகின்றன. இவை படத்தின் தரத்தை குறைப்பதாகவே அமைகின்றன.

தமிழ் சினிமாவை அதன் மரபுகளை உடைத்துக் கொண்டு வெளியே கொண்டுவருவதையும் தமிழ் சினிமாவை சர்வதேச தரத்திற்கு கொண்டுவருவதையும் தங்கள் நோக்கம் என சொல்லும் இயக்குனர்களது கூட்டத்தில் தன்னையும் ஒருவராகக் காட்டிக் கொள்ளும் சமுத்திரக்கனி வெறும் வணிக நோக்கங்களுக்காக தமிழ் சினிமாவின் பழைய குப்பைகளை படத்தில் புகுத்தத்தான் செய்திருக்கிறார். வணிகம் யாரைத்தான் விட்டுவைத்தது.

மக்களுக்கு கருத்தைச் சொல்ல வந்த படமாக இதை சினிமா உலகம் சொல்லிக் கொண்டாலும் பல இடங்களில் தர்க்க நியாயத்தை மீறிச் செல்லும் ஒரு சராசரி வணிகரீதியான படமாகவே இது இருக்கிறது. அதிகார வர்க்கத்தின் ஊழலையும் சுயநலத்திற்காய் ஊழலில் ஒரு பகுதியாக மாறும் பொது மக்களையும் குற்றம் சொல்லும் இப்படம் அரசியல்வாதிகளையும் ஊழல் செய்பவர்களுக்கு தண்டனைகளில் இருந்து தப்புவதற்கான பொறிமுறைகளை தன்னுள்ளே வைத்திருக்கும் சமூக பொருளாதார அமைப்பையும் பற்றிப் பெரிதாய்ப் பேசாதது ஏனோ?

## AK–47 இன் அரசியல்
பெப்ரவரி 6

4

AK – 47 ஈழத்தமிழர்கள் நன்கறிந்த பெயர். இது வெறும் துப்பாக்கியின் பெயர் அல்ல. இதன் பின்னால் ஈழத்தமிழர்களதும் உலகத்தின் கிளர்ச்சிக்குழுக்களதும் நினைவுகளும் வரலாறும் பொதிந்துள்ளது. ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் இத்துப்பாக்கியின் பங்கு என்ன, ஒடுக்கும் அரசுகள் இத்துப்பாக்கியினை எவ்வாறு பார்க்கின்றன, இத்துப்பாக்கியின் பின்னால் இயங்கும் மாபெரும் ஆயுத வணிக வலையமைப்பு எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றியெல்லாம் கலந்துரையாடிக் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட கூட்டமாக இது அமைந்தது.

## எமது சமூகத்தில் காணப்படும் உளவியற் சிக்கல்கள்
ஜனவரி 03

5

எம்மைச் சூழவுள்ள சமூகத்தில் காணப்படும் உடல் நலக் குறைபாடுகள் பற்றி இருக்கும் அக்கறையளவுக்கு சமூகத்தின் உள நலப் பிரச்சினைகள் தொடர்பான அக்கறை இல்லாதுள்ளது. இயல்பானதென்றும், எப்போதும் இருப்பதுதான் என்றும் நாம் கருதும் பல்வேறு உள நோய்க் கூறுகள் பாரதூரமானவையாகவும் கவனித்து மாற்றப்படவேண்டியனவாகவும் இருக்கலாம். இவ்வாறாக எமது சமூகத்தில் காணப்படும் பொதுவான உள நோய்க் கூறுகள் தொடர்பான கலந்துரையாடலாக இது அமைந்தது.

## New Democracy 50: நோக்கும் போக்கும்
ஜனவரி 23

6

New Democracy எனும் அரசியல் தத்துவார்த்த இதழின் 50வது இதழை அறிமுகப்படுத்தும் நோக்கில் இக்கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டது. இலங்கையில் அரசியற் தத்துவார்த்த இதழ் ஒன்றின் தேவை, இலங்கை மக்களுடைய அரசியல் ஆய்வுகளையும் உரையாடல்களையும் ஆங்கிலத்தில் பதிவு செய்யவேண்டிய தேவை போன்ற விடயங்களும், 50வது New Democracy இதழில் வெளியாகியுள்ள ஆக்கங்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

## பிரிவினைக்குப் பின் தென் சூடான்
ஜனவரி 16

7

2011 இல் தென் சூடான் தனி நாடாகப் பிரிந்த போது அதுபற்றித் தமிழ் ஊடகங்கள் நிறையவே பேசின. ஏகாதிபத்தியங்களை அண்டி நின்று தேசத்தைப் பிரித்துக்கொள்ளுவது சாத்தியமான நல்ல வழிமுறை என்று மீண்டும் மீண்டும் பரப்புரை செய்யப்பட்டது. பிரிந்து உருவான தென்சூடானோ இன்று உள்நாட்டுப் பிரச்சினையால் எரிகிறது. ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்காகத் தென்சூடான் பந்தாடப்படுகிறது. இப்போது அத் தமிழ் ஊடகங்கள் அமைதி காக்கின்றன. தென்சூடானில் என்ன தான் நடக்கிறது எனவும் தென் சூடானின் இந்தத் தலைவிதி ஏற்கனவே எழுதப்பட்ட ஒன்றா எனவும் ஏகாதிபத்தியங்களை அண்டி நின்று தேசிய இனம் ஒன்று விடுதலை அடைவது நடைமுறைச்சாத்தியமானதா எனவும் இக்கலந்துரையாடலில் உரையாடப்பட்டது.

## குழந்தைகளும் தேர்வும்: தரம் 5 பரீட்சையை முன்னிறுத்தி..
ஜனவரி 9

8

இலங்கையின் தேர்வு (Exam) முறை நீண்டகாலமாகவே விமர்சனத்துக்கு உள்ளாகி வரும் ஒன்று. 5ம் தரப் புலமைப் பரிசில் தேர்வினை நிறுத்த அரசு எடுத்த முடிவின் பின் இதுபற்றி மீண்டும் பரபரப்பான உரையாடல் தொடங்கியது. எமது கல்வி முறையும் தேர்வு முறையும் உண்மையிலேயே திறமையான பிள்ளைகளை உருவாக்குகிறதா அல்லது பிள்ளைகளின் ஆளுமையைப் பாதிக்கின்றதா என இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

## ஏகாதிபத்தியம் (Imperialism)
ஜனவரி 2

9

ஏகாதிபத்தியம் என்ற சொல் எல்லா இடங்களிலும் தாராளமாகப் புழங்குகிறது. வெளிநாட்டுத் தலைவர்கள் சொல்கிறார்கள் ஜே.வி.பீ சொல்கிறது புரட்சிகர சக்திகளும் சொல்கின்றன மகிந்தவும் சொல்கிறார். அந்தச் சொல்லுக்குப் பொருள்தான் என்ன? உலக அரசியலில் “ஏகாதிபத்தியம்” என்பதனை எவ்வாறு புரிந்து கொள்வது? இந்தக் கேள்விகளுக்கான பதிலாக இவ்வுரையாடல் அமைந்தது.

# MH370 விமானமும் சமூக வலைத்தளங்களும்

சமூகத்தை ஏய்ப்பதற்குப் (Social engineering*) பயன்படுத்தப்படக்கூடிய நல்லதொரு கருவியாக இந்த மலேசிய விமானம் மாறியிருக்கிறது. உலகில் எவ்வளவோ தீவிரமான மாற்றங்களும் பிரச்சினைகளும் நடந்துகொண்டிருக்கும் இந்தச் சூழலில் மலேசிய விமானத்தின் மீது அளவுக்கதிகமான கவனக் குவிப்பும் ஆர்வமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக அளவுக்கதிகமான முக்கியத்துவம் இச்செய்திக்கு ஏற்படுத்தப்படுவதே மக்களை ஏய்க்கும் நோக்கம் கொண்டதுதான்.

அது ஒரு புறமிருக்க, கணினி வழியாக மக்களை ஏய்க்க முனைபவர்கள் இப்போது மலேசிய விமானச் செய்தியைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். விமானத்தைத் தேடும் பணியில் திடீர் திருப்பம் ஏற்பட்டது போன்று புதிதாகப் புனையப்பட்ட தகவலொன்றினைச் செய்தியாக இவர்கள் தத்தமது தளங்களில் வெளியிடுகிறார்கள். இத்தளங்களிற் பல, புதிதாக இதற்கென்றே உருவாக்கப்பட்டவை. பார்வைக்கு நம்பகமான செய்தித்தளம் போல அதனை அவர்கள் வடிவமைக்கிறார்கள்.

சமூக வலைத்தளங்கள் வழியாக இத் தளங்களின் தொடுப்புக்கள் வேகமாகப் பரப்பப்படுகின்றன. ஏற்கனவே ஊடகங்களால் தயார்படுத்தப்பட்ட மக்களின் மனநிலை இவற்றை வேகமாகப் பகிரத் தூண்டுகிறது.

இவ்வாறு வலைத்தளங்களை உருவாக்குபவர்கள் உங்கள் கடவுச்சொற்களைத் திருடும் நோக்கத்துடனோ, விளம்பர நோக்குடனோ, வேறு வழிகளில் உங்களை ஏய்த்து இலாபமடையும் நோக்குடனோ தான் உருவாக்குகிறார்கள்.

கொஞ்சம் புத்தியுள்ளவர்களையும் ஏமாற்றுவதற்காகத்தான் செய்தித்தலைப்பில் "Confirmed by BBC", "CNN Stated" என்பது போன்ற சொற்றொடர்களைச் சேர்த்துவிடுகிறார்கள். BBC, CNN போன்ற புகழ்பெற்ற இவ்வூடகங்கள் தான் இந்த மாயைக்குள் மக்களை ஆழ்த்தின.

பகுத்தறிவுடன் இயங்க மிகவும் சோம்பல் கொண்ட எமது ஊடகவியலாளர்கள் பலரும் இச்செய்திகளை எடுத்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பரவலாக உருவாக்கப்படும் மாயைகளை, "பிரபலமான" கதைகளைக் கேள்விகளற்று அப்படியே நம்பிவிடும் மனநிலையே மக்களை ஏய்ப்பவர்களுக்கு வாய்ப்பாகிப்போகிறது.

[*Social Engineering என்பது சமூகமொன்றின் மனோநிலையைத் தெரிந்துவைத்துக் கொண்டு, அம் மனோநிலையை ஏய்த்துத் தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் மக்களிடமிருந்து தேவையான தகவல்களைக் கறந்துகொள்வதும் மக்களைத் தவறாக வழி நடத்துவதுமாகும். இது இணைய உலகில் கடவுச்சொற்களை, தனிப்பட்ட தகவல்களைத் திருடுவதற்கும் உளவு பார்ப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.]

